சத்தியம் வந்தது...
அசத்தியம் அழிந்தது...

SATHIYA PATHAI - TAMIL MONTHLY

KEELAi NEWS

# சத்திய பாதை

தமிழ் மாத இதழ்

உங்கள் சிந்தனைக்கு வழிகாட்டும்

சத்தியம்: 17 பாதை: 1 ஜனவரி - 2025 விலை: 15 ஆண்டு சந்தா: 100/-



**சுதந்திரமான தேர்தல்கள் இனி சாத்தியமா?**



**பல்கலை கழகமா? பாலியல் கூடமா?**



**சீறிய ராமதாஸ் கப்சிப் அன்புமணி**



**சுழல் நாயகன் அஸ்வின்**





www.keelainews.in

**இந்தியாவின் விடிவெள்ளி**

## மகளிருக்கான திராவிட மாடல்!







# துபாயில் கிரீன் குளோப் மற்றும் கீழை கம்யூனிட்டி சென்டர் இணைந்து நடத்திய இரத்ததான முகாம்

22122024 அன்று Green Globe மற்றும் கீழை கம்யூனிட்டி சென்டர் (KCC) இணைந்து நடத்திய இரத்ததான முகாம், துபாயின் ஜதாஃப் பகுதியில் உள்ள Dubai Health Blood Donation Centreல் நடைபெற்றது. இந்நிகழ்வில் 100க்கும் மேற்பட்ட நபர்கள் ஆர்வத்துடன் கலந்து கொண்டு ஆர்வத்துடன் இரத்த தானம் செய்தனர். நிக்ஷீமீமீஸீ நிறீஷீதீமீ சார்பில், இரத்த தானத்தில் பங்கேற்ற அனைவருக்கும் துபாய் ஹெல்த் மையத்தின் சார்பாக சான்றிதழ்கள் வழங்கப்பட்டது. இந்நிகழ்வின் ஏற்பாடுகளை Green Globe அமைப்பின் நிறுவனர் ஜாஸ்மின் மற்றும் கீழை கம்யூனிட்டி சென்டர் (KCC) இணைந்து செய்திருந்தனர். இரத்த தானம் செய்தவர்களுக்கு சம்யுக்தா பவன் சார்பில் உணவு வழங்கப்பட்டது. இது போல் மேலும் பல சமூக சேவைகளை முன்னெடுக்க ஒரு தொடக்கமாக அமையும் என அமைப்பின் ஒருங்கிணைப்பாளர்கள் தெரிவித்தனர்.

## ஆசிரியர் குரல்

# ஆரோக்கியமான புத்தாண்டை வாழ்த்தி வரவேற்போம்...

2024ம் ஆண்டு கடந்து 2025ம் ஆண்டை சில சந்தோசங்கள், இன்னல்கள், பல நாடுகளுக்கு இடையே போர், கொத்தாக கொத்தாக எதற்கு என்று அறியாமலே யாருடைய அரசியல் ஆதாயத்திற்காகவும், கதவி வெறியாலும், பதிசயாலும், வறுமையாலும் செத்து மடியும் அப்பாவி மக்கள். இத்தனை அமளிக்ளுக்கும் இடையில் சுகாதாரமான உணவு மற்றும் சுகாதாரமான உறைவிடம் என்பது மிகவும் கேள்விக்குறிய ஒன்றாகிவிட்டது.

நவீன உலகில் என்றோ கடை உணவு என்று நிலை மாறி வீட்டு உணவு உண்பது என்பது மிகவும் அறியதாகிவிட்டது. இதற்கு சாட்சி ஒவ்வொரு தெருவிலும் பெருகி வரும் பெருகி வரும் துரித உணவு கடைக களும், பாரம்பரிய பெயரில் உருவாகி வரும் உணவு கடைகளும் தான். இதற்கு முக்கிய காரணம் சமூக வலைதளங்களின் அதீத வளர்ச்சியும், அதிக நேரம் சமுக வலைதளங்களில் மூழ்கி வரும் மக்களும் தான். தற்காலத்தில் பெரிய உணவக நிறுவனங்களோ, சிறிய உணவகமோ, ரோட்டோர கடையோ எங்கும் நம்பிக்கையுடன் உணவு என்பதே சந்தேகமாகம் தான். இதற்கு சமீப காலமாக சுதாதாரத் துறையினால் சோதனையின் போது, சுகாதரக்கேடு என்ற பெயரில் மூடப்பட்டு வரும் பல்வேறு உணவு நிறுவனங்கள்தான்.

ஆனால் இதையும் தாண்டி தரமில்லாத உணவகங்கள் வளர காரணம், சமுகத்தின் மீதும், மக்கள் மீதும் மீதும் எந்த அக்கறையும் இல்லாமல் கிடைக்கும் வருமானம் வருமானம் மட்டுமே குறிக்கோளாக செயல்படும் சமுக ஊடகங்களில் ஆதிக்கம் செயல்படுத்துபவர்கள்தான் (Social Media Influencers). வருமானம் கிடைக்கிறது என்ற ஒரே காரணத்துக்காக தரமோ, சுவையோ இல்லாத கடைகளை கூட மக்கள் மத்தியில் பிரமலமாக்கும் சுயநலவாதிகள்தான். இதுபோன்ற போலி கொடிய நோய்களுக்கு விளம்பரத்தை நம்பி கேன்சர் போன்ற பாதிப்பவார்கள் அப்பாவி மக்கள்தான்.

அதையும் தாண்டி கஷ்டப்பட்டு கடின உழைப்பால் தரமான உணவகங்கள் தொடங்கும் நபர்களை தங்களின் சுயநலத்திற்காக தவறான தகவல்களை மக்கள் மத்தியிர் பரப்பி தொடங்கிய வியாபாரத்தை மூடும் நிலைக்கு கொண்டு செல்வதற்கு சமூக வலைதளங்களில் பணம் சம்பாதிக்கும் சுய நலவாதிகளே.

எல்லாவற்றிற்கும் மேலாக பொதுமக்கள் ஒரு உணவகத்தை சமூக வலைதளங்களின் தவறான விளம்பரங்களை மட்டும் நம்பி முடிவு செய்யாமல், சுயமான சிந்தித்து முடிவு எடுப்பதே நல்லது. அதே போல் பொதுமக்களின் நலனை கருத்தில் கொண்டு சமூக அக்கறையும் விளம்பரங்களை கையாள வேண்டும், போலிகளை களைய வேண்டும்.

– ஆசிரியர்



# அதிகரிக்கும் விமான விபத்துக்கள்!

**விமானத்தின் மீது பறவைகள் மோதுவதால் சிறிய அளவிலான சேதமே பொதுவாக ஏற்படுவதாக தரவுகள் தெரிவிக்கின்றன. அரிதிலும் அரிதாகவே விமானம் விபத்துக்குள்ளாகிறது.**

கஜகஸ்தானிலும், தென்கொரியா விலும் ஒரே வாரத்தில் நடைபெற்ற 2 கோரமான விமான விபத்துகள் உலகையே அதிர்ச்சிக்குள்ளாக்கியுள் ளன. 218 உயிர்களைப் பலிகொண்ட இந்த சம்பவங்கள் பெரும் கவலையையும், பயணிகள் விமானப் போக்குவரத்தின் பாதுகாப்பு குறித்த கேள்விகளையும் எழுப்பியிருக்கின்றன.

தென்கொரியாவைச் சேர்ந்த 'ஜேஜு ஏர்' நிறுவனத்துக்குச் சொந்தமான போயிங் 737800 ரக பயணிகள் விமானம் தாய்லாந்தின் பாங்காங்கில் இருந்து தென்கொரியாவின் முவானை நோக்கி ஞாயிற்றுக்கிழமை வந்துகொண் டிருந்தது. முவான் விமான நிலையத்தில் தரையிறங்க முயன்றபோது, ஓடுபாதையி லிருந்து விலகி கான்கிரீட் சுவரில் மோதி தீப்பிடித்ததில் 175 பயணிகள், 4 விமானப் பணியாளர்கள் என 179 பேர் உயிரிழந்தனர். 181 பேர் பயணம் செய்த இந்த விமானத்தில், விமானப் பணி யாளர்கள் இருவர் மட்டுமே தப்பினர்.

பறவைக் கூட்டத்தின் மீது விமா னம் மோதியதாக விமான கட்டுப்பாட்டு அறைக்கு விமானி தகவல் அனுப்பி யுள்ளார். இதனால் விமானத்தின்

## விபத்துகள் எழுப்பும் கேள்விகள்!

முன்சக்கரத்தின் (லேண்டிங் கியர்) செயல்பாட்டில் பிரச்னை ஏற்பட்டதாகவும், இதையடுத்து, லேண்டிங் கியரை பயன்படுத்தாமல் (பெல்லி லேண்டிங் முறையில்) விமானத்தை நேரடியாகத் தரையிறக்க முயன்றபோது, விமானம் விமான ஓடுபாதையில் இருந்து விலகி, அங்கிருந்த கான்கிரீட் சுவரில் மோதி தீப்பிடித்ததாகவும் கூறப்பட்டது. விமானத்தில் பயணம் செய்தவர்களை வரவேற்க விமான நிலையத்தில் ஆவலுடன் காத்திருந்த உறவினர்கள், நண்பர்களுக்கு விமானம் விபத்துக்குள்ளான தகவல் பேரிடியாக இறங்கியது. ஒருசில மணித் துளிகளில் தங்கள் உறவினர்களை நேரில் காண்போம் என்ற நம்பிக்கை ஒரு நொடிப் பொழுதில் கருகிப்போனது. விமான நிலையத்தில் அவர்கள் கதறியழுத துயரத்தை விவரிக்க வார்த்தைகளே இல்லை.

உலகம் முழுவதும் நாள்தோறும் சுமார் 1.20 லட்சம் விமானப் போக்குவரத்துகள் நடைபெறுகின்றன. பயணிகள் விமானப் போக்குவரத்து பெரிதும் அதிகரித்துள்ள இந்தக் காலகட்டத்தில் விமானங்களின் மீது பறவைகள் மோதும் சம்பவங்கள் அடிக்கடி நடைபெறுகின்றன. விமானத்தின் மீது பறவைகள் மோதுவதால் சிறிய அளவிலான சேதமே பொதுவாக ஏற்படுவதாக தரவுகள் தெரிவிக்கின்றன. அரிதிலும் அரிதாகவே விமானம் விபத்துக்குள்ளாகிறது.

தென்கொரியா சம்பவத்தில் பறவைகள் மோதியதைத் தொடர்ந்து, விமானத்தில் மின் செயலிழப்பு ஏற்பட்டு, 'ஏடிஎஸ்பி டேட்டா' எனப்படும் விமானத்தின் இருப்பிட விவரத்தைக் கட்டுப்பாட்டு அறைக்குத் தெரிவிக்கும் செயல்பாடு துண்டிக்கப்பட்டிருக்கலாம் என நிபுணர்கள் சுட்டிக்காட்டுகின்றனர். ஆனாலும், ஒரு பறவையின் மோதல்தான் விமான விபத்துக்கு ஒரே காரணம் என்பதை நிபுணர்களால் உறுதியாகச் சொல்ல முடியவில்லை.

கஜகஸ்தானில் கடந்த புதன்கிழமை நிகழ்ந்த பயணிகள் விமான விபத்துக்கும் பறவை மோதல்தான் காரணம் என முதலில் கூறப்பட்டது. அஜர்பைஜான் தலைநகர் பாகுவில் இருந்து எம்ப்ரயர்190 என்ற பயணிகள் விமானம் 67 பேருடன் ரஷியாவின் கிரோஸ்னி நகருக்குப் புறப்பட்டது. இந்த விமானம் கஜகஸ்தானில் உள்ள அக்தௌ நகரம் வழியாகப் பயணித்தபோது விமானத்தை அவசரமாகத் தரையிறக்க கட்டுப்பாட்டு அறைக்கு விமானிகள் தகவல் அளித்தனர். விமானம் தரையிறங்கும்போது கட்டுப்பாட்டை இழந்து வேகமாக தரையில் மோதி வெடித்தது. விமானத்தில் இருந்தவர்களில் 36 பேர் உயிரிழந்தனர். விமானம் மீது பறவைகள் கூட்டம் மோதியதால், விமானியின் கட்டுப்பாட்டை இழந்து விபத்து ஏற்பட்டதாக ரஷிய ஊடகம் தெரிவித்தது. ஆனால், ரஷிய வான் பாதுகாப்பு ஏவுகணைதான் அந்த விமானத்தை சுட்டுவீழ்த்தியதாக பின்னர் தகவல் வெளியானது.

இதைத் தொடர்ந்து, ரஷிய வான் எல்லையில் ஏற்பட்ட அந்த விபத்துக்கு அஜர்பைஜான் அதிபர் இல்ஹம் அலியெவிடம் ரஷிய அதிபர் விளாதிமீர் புதின் மன்னிப்பு கோரினார். இந்த விபத்து நேர்ந்தபோது ரஷிய நகரங்களில் உக்ரைனின் ட்ரோன் தாக்குதலை முறியடிக்கும் பணியில், ரஷிய வான் பாதுகாப்புத் தளவாடங்கள்



ஈடுபடுத்தப்பட்டிருந்ததாக ரஷியா தெரிவித்தது. இருப்பினும் தங்களின் வான் பாதுகாப்பு ஏவுகணைதான் அஜர்பைஜான் விமானத்தை சுட்டுவீழ்த்தியாக ரஷியா நேரடியாகக் குறிப்பிடவில்லை. இந்த சம்பவம் வேண்டுமென்றே நடத்தப்படவில்லை என்றாலும், தனது தவறை மூடி மறைக்க பல நாள்களாக ரஷியா முயற்சித்ததாக அஜர்பைஜான் அதிபர் குற்றஞ்சாட்டினார். மலேசியன் ஏர்லைன்ஸுக்கு சொந்தமான எம்ஹெச்370 என்ற விமானம், கடந்த 2014ஆம் ஆண்டு மார்ச் மாதம் 239 பயணிகளுடன் கோலாலம்பூரிலிருந்து சீனாவின் பெய்ஜிங்கை நோக்கி சென்றுகொண்டிருந்தபோது நடுவானில் மாயமான நிகழ்வை மறந்திருக்க முடியாது. அந்த விமானம் கடலில் விழுந்துவிட்டதாக அதிகாரபூர்வமாக அறிவிக்கப்பட்டாலும், விமானத்தின் பாகங்கள் எதுவும் கிடைக்கவில்லை.

விமான விபத்துகளுக்கு பறவைகள் மோதலும், தொழில்நுட்பக் கோளாறுகள் மட்டுமே காரணமல்ல. உலகளாவிய அளவில் விமான ஓட்டுகள் கடுமையான மன அழுத்தத்துக்கு உள்ளாகிறார்கள் என்று ஆய்வு தெரிவிக்கின்றன. சாமானியர்களும் விமானத்தில் பறக்கும் அளவிலான வாழ்க்கைத் தரம் உயர்ந்திருக்கும் நிலையில், விமான விபத்துகள் தொடர்கதையாவது தடுக்கப்பட வேண்டும்.


# சத்திய பாதை

சத்தியம்: 17 பாதை: 1 ஜனவரி: 2025 விலை:15

பதிப்பாளர்
**கே.எம்.அப்துல்லா**

ஆசிரியர்:
**செய்யது ஆப்தீன்**

நிர்வாக ஆசிரியர்
**கா.ரஃபிக் அஹமது**

இணை ஆசிரியர்
**J.அஸ்கர் அலி**
**சேகு முகம்மது, பாக்கர் அலி**

நிருபர்கள் குழு
**அபுபக்கர் சித்திக்** தென்காசி
**முருகன்** இராமநாதபுரம்
**மோகன்** உசிலம்பட்டி
**சரவண குமார்** திருவண்ணாமலை
**மன்சூர்** தேவகோட்டை
**பாபு** கள்ளக்குறிச்சி
**ஷாநவாஸ்** மேட்டுப்பாளையம்
**சக்தி சரவணன் குமார்** சிவகங்கை
**சுந்தர்** தஞ்சாவூர்
**பஷீர்** திருச்சி
**தண்டபாணி** பரமக்குடி

keelainewsco@gmail.com
+917339039559
+919524127408
+919597550786

Press and Registration of Books Act - ன் படி செய்திகளின் தேர்வுக்கு நிர்வாக ஆசிரியர் மட்டுமே பொறுப்பாவார்.
இதழில் வெளியாகும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு நிர்வாகம் பொறுப்பல்ல. பேட்டிகள் மற்றும் சிறப்புக் கட்டுரையாளர்களின் கருத்துக்கள் அவர்களின் சொந்த கருத்துக்களே.

உங்கள் சந்தா தொகையை
**KEELAI MEDIA & ADVERTISEMENT PRIVATE LTD**
என்ற பெயரில்
**HDFC BANK , Kilakarai Branch,**
**A/C# 50200026748168,**
**IFSC CODE: HDFC0004037** செலுத்தலாம்

வடிவமைப்பு: கலை கிராபிக்ஸ் 8220116303

# சட்டத்தை மீறும் பாஜக பதிலடி கொடுக்கும் காங்கிரஸ்!



'மத்திய அரசின் கைப்பாவையாக தேர்தல் ஆணையம் மாறிவிட்டது. அதனால், நேர்மையான, சுதந்திரமான தேர்தல் நடைபெறுவதில்லை' என்ற குற்றச்சாட்டு அதிகரித்துவருகிறது. இந்தக் குற்றச்சாட்டு நிஜம்தான் என்று உறுதிசெய்வதுபோல, சர்ச்சைக்குரிய சட்டத்திருத்தம் ஒன்றை மத்திய அரசு மேற்கொண்டிருக்கிறது. அதற்கு எதிராக உச்ச நீதிமன்றத்தில் காங்கிரஸ் கட்சி வழக்கு தொடர்ந்திருக்கிறது!





**'வெளிப்படைத்தன்மைக்கு வேட்டு... ஆவணங்கள் எதையும் பெற முடியாது!'**

2024ம் ஆண்டில் மக்களவைத் தேர்தலும், ஹரியானா, ஜார்க்கண்ட், மகாராஷ்டிரா ஆகிய சட்டமன்றங்களுக்கான தேர்தல்களும் நேர்மையாக நடத்தப்படவில்லை என்ற குற்றச்சாட்டை எதிர்க்கட்சிகளும், குடிமை அமைப்புகளும் முன்வைத்திருக்கின்றன. ஆதாரங்களுடன் அவர்கள் எழுப்பும் குற்றச்சாட்டுகளுக்கு, தேர்தல் ஆணையத்திடம் உரிய பதிலோ, விளக்கமோ இல்லை என்ற குற்றச்சாட்டும் எழுந்திருக்கிறது. இந்த நிலையில், தேர்தலில் வெளிப்படைத்தன்மைக்கு வேட்டுவைக்கும் வகையில் சட்டத்திருத்தம் ஒன்றை, மத்திய பா.ஜ.க அரசு மேற்கொண்டிருப்பது சர்ச்சையை உண்டாக்கியிருக்கிறது.

தேர்தல் நடத்தை விதிகள் 1961, விதி 93 (2) (ஏ) ன்படி, தேர்தல் தொடர்பான அனைத்து

**சுதந்திரமான தேர்தல்கள் இனி சாத்தியமா?**

**குறிப்பாக, தேர்தல் தொடர்பான சிசிடிவி பதிவுகள் உள்ளிட்ட மின்னணு ஆவணம் எதையும் இனி பெற முடியாது. இதற்கு, மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி, காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே, தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் உள்ளிட்ட தலைவர்கள் கடும் எதிர்ப்பு தெரிவித்திருக்கிறார்கள்.**



ஆவணங்களையும் தகவல் அறியும் உரிமைச் சட்டம் மூலமாகவோ, நீதிமன்றங்கள் மூலமாகவோ ஆணையத்திடமிருந்து பொதுமக்களால் பெற முடியும். அதை காலி செய்யும்விதமாக, கடந்த டிசம்பரில் நடைபெற்ற நாடாளுமன்றக் குளிர்காலக் கூட்டத்தொடரில், மோடி அரசு தேர்தல் சட்ட விதிகளைத் திருத்தியிருக்கிறது. குறிப்பாக, தேர்தல் தொடர்பான சிசிடிவி பதிவுகள் உள்ளிட்ட மின்னணு ஆவணம் எதையும் இனி பெற முடியாது. இதற்கு, மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி, காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே, தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் உள்ளிட்ட தலைவர்கள் கடும் எதிர்ப்பு தெரிவித்திருக்கிறார்கள்.



ஏற்கெனவே, ‘தேர்தல் ஆணையர்கள் நியமனத்தில் பிரதமர், மக்களவை எதிர்க்கட்சித் தலைவர், உச்ச நீதிமன்றத் தலைமை நீதிபதி ஆகியோரைக்கொண்ட குழு முடிவெடுக்க வேண்டும்’ என்று உச்ச நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவை மோடி அரசு மாற்றியது. அதாவது, அந்தக் குழுவில் இருந்த உச்ச நீதிமன்றத் தலைமை நீதிபதியை நீக்கிவிட்டு, மத்திய அமைச்சர் ஒருவரை அதில் இணைத்துக்கொள்வதென்று சட்டத்தை மாற்றினார்கள். இதனால், தேர்தல் ஆணையர்கள் நியமனத்தில் நம்பகத்தன்மை கேள்விக்குறியாகி விட்டது.



இதைத் தொடர்ந்து, ‘அரசியல் சாசன அமைப்பான தேர்தல் ஆணையத்தை, தனக்குக்கீழே செயல்படும் ஒரு துறையைப்போல மத்திய அரசு மாற்றிவிட்டது’ என்ற விமர்சனத்தை முன்னாள் ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ் அதிகாரிகள், முன்னாள் உச்ச நீதிமன்ற, உயர் நீதிமன்ற நீதிபதிகள், முன்னாள் ராணுவத் தளபதிகள் எனப் பலரும் முன்வைத்து வருகிறார்கள்.



இந்தச் சூழலில், ஹரியானா சட்டமன்றத் தேர்தலில் பா.ஜ.க வெற்றிபெற்ற வாக்குச் சாவடியில் பதிவுசெய்யப்பட்ட சிசிடிவி காட்சிகளையும், வாக்குப்பதிவு ஆவணங்களையும் வழங்குமாறு பஞ்சாப்ஹரியானா உயர் நீதிமன்றத்தில் ஒரு வழக்கு தொடரப்பட்டது. அதில், சம்பந்தப்பட்ட ஆவணங்களின் நகல்களை மனுதாரருக்கு வழங்குமாறு தேர்தல் ஆணையத்துக்கு உயர் நீதிமன்றம் உத்தரவிட்டது.

அந்த உத்தரவு வந்தவுடன்தான், தேர்தல் விதிகளில் அவசர அவசரமாக பா.ஜ.க அரசு இப்படியொரு திருத்தத்தை மேற்கொண்டிருக்கிறது.

இந்த விவகாரம் குறித்து ஓய்வுபெற்ற ஐ.ஏ.எஸ் அதிகாரி கோ.பாலச்சந்திரனிடம் பேசினோம். “தேர்தல் குறித்து சந்தேகங்கள் எழுந்தால், அந்தத் தேர்தல் தொடர்பான ஆவணங்களைத் தேர்தல் ஆணையத்திடம் பொதுமக்கள் கேட்டுப் பெறலாம். இது ஒரு வழக்கமான நடைமுறை. ஆனால், ஹரியானா சட்டமன்றத் தேர்தல் தொடர்பான சில ஆவணங்களைக் கேட்டு தொடரப்பட்ட வழக்கில், ஆவணங்களை வழங்குமாறு உயர் நீதிமன்றம் உத்தரவிட்ட பிறகு உடனே ஒரு சட்டத்திருத்தத்தை மத்திய அரசு செய்திருக்கிறது. இனிமேல், மக்கள் கேட்கும் ஆவணங்களைத் தேர்தல் ஆணையம் வழங்காது. இதனால் பாதிக்கப்படப்போவது ஜனநாயகம்தான். நியாயமான முறையில் நடத்தப்படும் தேர்தல்கள்தான் ஜனநாயகத்தின் ஆணிவேர். அந்த ஆணிவேரையே அழுகச் செய்யும் முயற்சிகளில் ஒன்றைத்தான் மத்திய அரசு இப்போது செய்திருக்கிறது” என்றார்.

‘நியாயமாகவும் நேர்மையாகவும் தேர்தல் நடைபெற்றது’ என்ற நம்பிக்கையைப் பொதுமக்களுக்கு ஏற்படுத்துவது தேர்தல் ஆணையத்தின் தலையாயக் கடமை. அதற்கு ஆணையத்தின் செயல்பாடுகள் வெளிப்படையாக இருக்க வேண்டியது மிக மிக அவசியம். ஆனால், ‘முக்கியமான ஆவணங்களைத் தர முடியாது’ என்ற நிலை உருவாகிவிட்ட பிறகு, ஆணையத்தின் மீதான நம்பகத்தன்மையே கேள்விக்குரியதாகிறது.

இந்த நிலையில், மத்திய அரசின் சட்டத்திருத்தத்துக்கு எதிராக, உச்ச நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்திருக்கிறார் காங்கிரஸ் கட்சியின் பொதுச்செயலாளர் ஜெய்ராம் ரமேஷ். ‘அதிக வெளிப்படைத்தன்மைதான் நேர்மையான, சுதந்திரமான தேர்தலை உறுதிசெய்யும். தேர்தல் நடைமுறையில் தற்போது நேர்மை குறைந்துவரும் சூழலில், நேர்மையான, சுதந்திரமான தேர்தல் நடைபெறுவதை உச்ச நீதிமன்றம் உறுதிசெய்யும் என நம்புகிறோம்’ என்று கூறியிருக்கிறார்.

இந்திய ‘ஜனநாயக உரிமைகள்’ காக்கப்பட வேண்டும்!

# மகளிருக்கான திராவிட மாடல் ஆட்சி



தமிழ்நாட்டில் பெண்களுடைய முன்னேற்றத்துக்கு பல்வேறு திட்டங்களை முதல்வர் மு.க.ஸ்டாலின் செயல்படுத்தி வருகிறார். இவரது ஆட்சியில் தான் பெண்களுக்கான இலவச பேருந்து பயணம் திட்டம், கலைஞர் மகளிர் உரிமைத் தொகை திட்டம் முக்கியமானது. கலைஞர் மகளிர் உரிமைத் தொகை திட்டத்தின் கீழ் மாதம் ஆயிரம் ரூபாய் என்பது பெண்களுக்கு தன்னம்பிக்கை ஏற்படுத்தி உள்ளது. புதியதாக ஆயிரக்கணக்கான மகளிர் சுய உதவிக்குழுக்கள் தொடங்கப்பட்டுள்ளன. பெண்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டு அவர்கள் தொழில் தொடங்க அரசால் கடனும் வழங்கப்பட்டு வருகிறது. இதற்காக 202324ம் ஆண்டில் 30 ஆயிரம் கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. தமிழ்நாட்டில் ஏழரை லட்சம் மகளிர் குழுக்கள் உள்ளன.

பெண்களும் அர்ச்சகராக ஆகலாம் என தமிழக அரசு அறிவித்து பெண் அர்ச்சகராக நியமிக்கப்பட்டுள்ளார். ஊதியத்துடன் கூடிய பேறுகால விடுப்பை 9 மாதங்களில் இருந்து 12 மாதங்களாக உயர்த்தி அறிவித்துள்ளது. தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம் மூலம் அளிக்கப்படும் வீடுகளும் இனி குடும்ப தலைவிகள் பெயரிலேயே பதிவு செய்யப்படும் என முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவித்துள்ளார். சாலை பாதுகாப்பு பணிகளில் பெண் காவலர்களை நியமிக்க வேண்டாம் என்பதை நடைமுறைப்படுத்தினார். பெண்களின் பாதுகாப்பை உறுதி செய்ய அனைத்து உட்கோட்டங்களிலும் ஒரு மகளிர் காவல் நிலையம் அமைக்கும் திட்டம் தொடங்கப்பட்டுள்ளது. வேலைக்கு செல்லும் பெண்கள் பாதுகாப்பாக தங்குவதற்கு அரசு மகளிர் விடுதிகள் ஏற்படுத்தப்பட்டு வருகிறது.

முக்கிய போட்டி தேர்வுகளுக்கான பயிற்சிகளை பெண்களுக்கு வழங்குவது, பெண் குழந்தைகள் பாதுகாப்புக்காக தற்காப்புக்கலை பயிற்சி வழங்குவது



**பெண்களை படிக்க வைத்தால் பண்பாட்டை இழந்துவிடுவார்கள் என்ற மூடநம்பிக்கை இருந்தது. பெண்களுக்கு எதிராக படிப்புக்கு மட்டுமல்ல, வேறு எந்த தடை வந்தாலும் அதை உடைப்பேன்**



என பல திட்டங்களை தமிழக அரசு தொடர்ந்து செயல்படுத்தி வருகிறது. பெண் குழந்தைகள் கல்வி பயில்வதை ஊக்குவிக்கும் வகையிலும் அவர்களின் உயர்கல்விக்கு உதவி செய்யும் நோக்கிலும் புதுமைப் பெண் திட்டம் தொடங்கப்பட்டது. இதன் மூலம் அரசு பள்ளிகளில் 6 முதல் 12ம் வகுப்பு வரை பயிலும் மாணவிகளுக்கு உயர்கல்வி பயில மாதம் ₹1000 உதவித்தொகை வழங்கப்படுகிறது. இதனால் குடும்பச்சூழல், வறுமை, காரணமாக கல்வியை தொடர முடியாத மாணவிகள் பெரிதும் மகிழ்ச்சி அடைகின்றனர்.

அரசு உதவி பெறும் பள்ளி மாணவிகளும் பயன்பெறும் வகையில் புதுமை பெண் திட்டத்தின் விரிவாக்கத்தை தூத்துக்குடியில் முதல்வர் மு.க.ஸ்டாலின் துவக்கி வைத்தார். உயர்கல்வியிலும் இந்தியாவிலேயே தமிழ்நாட்டு மாணவிகள் முதன்மையான இடத்தில் இருக்கிறார்கள். கல்வியை பொறுத்தவரையில் பெண்கள்தான் முன்னிலையில் உள்ளனர். 50 ஆண்டுகளுக்கு முன் பெண்கள் படிப்பதில் தடைக்கற்கள் இருந்தன.

பெண்களை படிக்க வைத்தால் பண்பாட்டை இழந்துவிடுவார்கள் என்ற மூடநம்பிக்கை இருந்தது. பெண்களுக்கு எதிராக படிப்புக்கு மட்டுமல்ல, வேறு எந்த தடை வந்தாலும் அதை உடைப்பேன் என முதல்வர் கூறியுள்ளார். பல்வேறு திட்டங்கள், பாதுகாப்பு ஆகியவற்றால் பெண்களுக்கு துணிச்சல் அதிகரித்துள்ளது. பாலியல் புகார்களில், பெண்கள் காவல்துறையினரிடம் புகார் அளிக்கவே அஞ்சி நடுங்கிய நிலை மாறி, தற்போது துணிச்சலாக புகார் தருகிறார்கள் என்பதை பாராட்ட மனம் இல்லாமல் சில கட்சிகள் போராட்டம் நடத்துவது பெண்களுக்கு மனஅழுத்தத்தை ஏற்படுத்தும் என்பதை மறுக்க முடியாது.



## தங்கைகளுக்கு என் அன்பும், வாழ்த்தும்

புதுமைப்பெண் திட்ட விரிவாக்கம் மூலம், பயன்பெறும் தங்கைகளுக்கு என் அன்பும், வாழ்த்தும் என துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக துணை முதல்வர் உதயநிதி தனது எக்ஸ் தளத்தில் கூறிய வாழ்த்து செய்தியில்; அரசுப்பள்ளிகள் மட்டுமன்றி, அரசு உதவி பெறும் பள்ளிகளில் படித்த மாணவியரும், மாதம் ரூ.1000 உதவித்தொகை பெறுகிற வகையில், புதுமைப்பெண் திட்டத்தை விரிவாக்கம் செய்து, முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தொடங்கி வைத்துள்ளார்கள்.

ஏற்கனவே, மாதந்தோறும் 2.98 லட்சம் மாணவியர் இத்திட்டத்தால் பயன்பெற்று வரும் நிலையில், இனி கூடுதலாக 75 ஆயிரம் மாணவிகள் கல்வி உதவித்தொகை பெறவுள்ளனர்.

புதுமைப்பெண் திட்டத்தின் வெற்றிக்கு தமிழ்நாட்டில் அதிகரித்து வரும் மாணவிகளின் உயர்கல்வி சேர்க்கை விகிதமே சாட்சி. சமூகத்தில் சரி பாதி இருக்கும் பெண்களின் கல்விக்கு நம் திராவிட மாடல் அரசு என்றும் துணை நிற்கும்.

புதுமைப்பெண் திட்டத்தின் விரிவாக்கம் மூலம், பயன்பெறுகின்ற அத்தனை தங்கைகளுக்கும் என் அன்பும், வாழ்த்தும் !. இவ்வாறு துணை முதல்வர் தெரிவித்துள்ளார்.



# தமிழ்நாடு 2024 ஒரு பார்வை

**பரபரக்கும் உலகில் 2024–ம் ஆண்டு தமிழகத்தில் நடந்த முக்கிய தகவல்களை தொகுப்பாக பார்க்கலாம்.....**





### ஜாபர் சாதிக் கைது!

மார்ச் 9ம் தேதி, 'சர்வதேச அளவில் போதைப்பொருள் கடத்தி, 2,000 கோடி ரூபாய்க்கு மேல் சம்பாதித்ததாக', சென்னையைச் சேர்ந்த தி.மு.க நிர்வாகி ஜாபர் சாதிக், மத்திய போதைப்பொருள் தடுப்புப் பிரிவு (என்.சி.பி) அதிகாரிகளால் கைதுசெய்யப்பட்டார். இதையடுத்து தி.மு.கவிலிருந்து நீக்கப்பட்டார் சாதிக்.

### நாடாளுமன்றத் தேர்தல் முடிவுகள்!

2024 நாடாளுமன்றத் தேர்தலில், தமிழ்நாடு, புதுச்சேரியில் 40க்கு 40 இடங்களையும் தி.மு.க கூட்டணி கைப்பற்றியது. தமிழகத்தின் பிரதான கட்சிகளில் ஒன்றான அ.தி.மு.க., ஏழு இடங்களில் டெபாசிட் இழந்தது. 12 தொகுதிகளில் பா.ஜ.க கூட்டணி இரண்டாம் இடம் பிடித்தது. கன்னியாகுமரியிலும், புதுச்சேரி தொகுதியிலும் 'நாம் தமிழர் கட்சி' மூன்றாவது இடத்தைப் பிடித்தது.

### புதிய கட்சி தொடங்கிய விஜய்!

தமிழகத்தின் முன்னணி நடிகரான விஜய், பிப்ரவரி மாதம் 'தமிழக வெற்றிக் கழகம்' என்ற அரசியல் கட்சியைத் தொடங்கினார். இதைத் தொடர்ந்து அக்டோபர் 27ம் தேதி, த.வெ.க முதல் மாநில மாநாடு நடைபெற்றது. மாநாட்டில் அறிவிக்கப்பட்ட த.வெ.கவின் கொள்கைகள், தமிழக அரசியல் களத்தில் பெரும் பேசுபொருளாகின.



## கள்ளக்குறிச்சி கள்ளச்சாராய மரணம்!

ஜூன் 19ம் தேதி கள்ளக்குறிச்சி மாவட்டம், கருணாபுரத்தில், கள்ளச்சாராயம் குடித்து 63 பேர் இறந்துபோனது நாட்டையே அதிரவைத்தது. உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு தலா 10 லட்சம் ரூபாயைத் தமிழக அரசு நிவாரணமாக வழங்கியது சர்ச்சையை ஏற்படுத்தியது. இந்தச் சம்பவம் குறித்து விசாரணை நடத்த ஓய்வுபெற்ற நீதியரசர் தலைமையில் ஒரு நபர் ஆணையம் அமைக்கப்பட்டிருக்கிறது.



### காங்., ஜெயக்குமார் கொலை!

திருநெல்வேலி கிழக்கு மாவட்ட காங்கிரஸ் தலைவராக இருந்த ஜெயக்குமார், மே 2ம் தேதி காணாமல்போனார். இதையடுத்து, மே 4ம் தேதி அவருக்குச் சொந்தமான தோட்டத்தில், சடலமாக மீட்கப்பட்டார். இது குறித்த வழக்கு விசாரணை சி.பி.சி.ஐ.டி போலீஸாருக்கு மாற்றப்பட்டும், இதுநாள் வரை குற்றவாளிகள் யார், கொலை எப்படி நடந்தது என்பது மர்மமாகவே நீடித்துவருகிறது.

### ஆம்ஸ்ட்ராங் கொலை!



பகுஜன் சமாஜ் கட்சியின் தமிழகத் தலைவர் ஆம்ஸ்ட்ராங், பெரம்பூரிலுள்ள அவரது வீட்டுக்கு அருகே கடந்த ஜூலை 5ம் தேதி வெட்டிப் படுகொலைசெய்யப்பட்டார். இந்த வழக்கில் பிரபல ரௌடி ஆற்காடு சுரேஷின் தம்பி பொன்னை பாலு உட்பட 28 பேர் கைது செய்யப்பட்டனர்.

### எடப்பாடியை ரவுண்டு கட்டிய அறுவர்!

அ.தி.மு.கவில் நிலவும் உட்கட்சிப் பிரச்னை, 2024 முழுக்க அப்படியே தொடர்ந்தது. 'கட்சியிலிருந்து நீக்கப்பட்ட சசிகலா, ஓ.பி.எஸ்., தினகரனை மீண்டும் இணைக்க வேண்டும்' என்ற கருத்தோடு, முன்னாள் அமைச்சர்களான செங்கோட்டையன், நத்தம் விசுவநாதன், கே.பி.அன்பழகன், சி.வி.சண்முகம், வேலுமணி, தங்கமணி ஆகிய ஆறு பேர் சேலத்தில் எடப்பாடியை ஜூலை 8ம் தேதி சந்தித்துப் பேசினர். இந்தச் சந்திப்பு ஏற்படுத்திய உஷ்ணம், அ.தி.மு.கவுக்குள் இன்னும் அடங்கவில்லை.

### அதானி தமிழகம் வருகை!

ஹிண்டன்பர்க் அறிக்கை, நிலக்கரி ஊழல் எனத் தொழிலதிபர் அதானி மீதான சர்ச்சைகள், ஆண்டின் தொடக்கத் திலிருந்தே நாடு முழுவதும் கொழுந்து விட்டு எரிந்துவந்தன. இந்த நிலையில், ஜூலை மாதம் தமிழ்நாட்டுக்கு வந்த அதானி, முதல்வர் ஸ்டாலினைச் சந்தித்துப் பேசியதாக தகவல் வெளியானது. ஆனால், முதல்வர் ஸ்டாலின், 'நான் அதானியைச் சந்திக்கவில்லை' என மறுப்பு தெரிவித்தார். இதையடுத்து, 'சென்னையில் அதானி யாரைச் சந்தித்தார்?' என்பது விடை தெரியாத கேள்வியாகவே தொடர்கிறது.





### விக்கிரவாண்டி இடைத்தேர்தல்!

விக்கிரவாண்டி தொகுதி தி.மு.க சட்டமன்ற உறுப்பினர் புகழேந்தி மரணமடைந்ததைத் தொடர்ந்து, ஜூலை 10ம் தேதி இடைத்தேர்தல் நடந்தது. பிரதான எதிர்க்கட்சியான அ.தி.மு.க இடைத்தேர்தலைப் புறக்கணித்திருந்த சூழலில், தி.மு.க வேட்பாளர் அன்னியூர் சிவா வெற்றிபெற்றார். பா.ம.க வேட்பாளர் டெபாசிட்டைத் தக்கவைத்தார்.



**முதல்வர் வெளிநாட்டுப் பயணம்: தமிழகத்துக்குத் தொழில் முதலீடுகளை ஈர்க்கும் நோக்கில் முதல்வர் ஸ்டாலின், ஆகஸ்ட் 27ம் தேதி அமெரிக்காவுக்குச் சென்றார். 'அமெரிக்காவில் 17 நாள்களில் 25 நிறுவனங்களுடன் மேற்கொண்ட சந்திப்பில் 7,618 கோடி ரூபாய் மதிப்பிலான 19 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்தாகின' என்று அறிவிக்கப்பட்டது.**



### அண்ணாமலை லண்டன் பயணம்!

பா.ஜ.க மாநிலத் தலைவர் அண்ணாமலை, லண்டனிலுள்ள ஆக்ஸ்ஃபோர்டு பல்கலைக்கழகத்தில், சர்வதேச அரசியலுக்கான சான்றிதழ் படிப்பைப் படிக்க 2882024 அன்று லண்டனுக்குப் புறப்பட்டுச் சென்றார். மூன்று மாதப் படிப்பை முடித்துவிட்டு, டிசம்பர் 1ம் தேதி சென்னைக்குத் திரும்பினார்.

### செந்தில் பாலாஜிக்கு ஜாமீன்!



சட்டவிரோதப் பணப் பரிமாற்ற வழக்கில், 2023ல் சிறைக்குச் சென்ற அமைச்சர் செந்தில் பாலாஜி, தனது அமைச்சர் பதவியையும் ராஜினாமா செய்திருந்தார். இந்த நிலையில், 15 மாதச் சிறைவாசத்துக்குப் பிறகு, 26-9-2024 அன்று ஜாமீன் கிடைக்கப்பெற்று வெளிவந்த செந்தில் பாலாஜி, அடுத்த இரண்டு நாள்களில் மீண்டும் அமைச்சராகப் பொறுப்பேற்றார்.

### துணை முதல்வர் உதயநிதி!



செப்டம்பர் 28ம் தேதி நடைபெற்ற தமிழக அமைச்சரவை மாற்றத்தின்போது, சேப்பாக்கம் தொகுதி எம்.எல்.ஏவும், அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் துணை முதல்வரானார்.

ஏற்கெனவே அமைச்சரவையில் அங்கம் வகித்துவந்த மனோ தங்கராஜ், ராமச்சந்திரன், செஞ்சி மஸ்தான் ஆகியோரின் அமைச்சர் பதவிகள் பறிக்கப்பட்டு, கோவி. செழியன், பனை மரத்துப்பட்டி ராஜேந்திரன், நாசர் உள்ளிட்டோர் புதிதாக அமைச்சரவையில் இடம்பிடித்தனர்.



## கவரப்பேட்டை ரயில் விபத்து!

அக்டோபர் 11ம் தேதி, திருவள்ளூர் மாவட்டம் கவரப்பேட்டை அருகே சென்றுகொண்டிருந்த பாக்மதி எஸ்பிரஸ், சரக்கு ரயில்மீது மோதி விபத்துக்குள்ளானது. 16 பயணிகள் படுகாயம் அடைந்தனர். அதிர்ஷ்டவசமாக உயிரிழப்புகள் எதுவும் நிகழவில்லை.



## சீமான், ரஜினி சந்திப்பு!

நடிகர் ரஜினிகாந்த்தை 'சங்கி', 'பா.ஜ.கவின் அடியாள்' என மிகக் கடுமையாக விமர்சித்து வந்த நா.த.க தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான், நவம்பர் 21ம் தேதி அதே ரஜினியை வீடு தேடிச் சென்று சந்தித்துப் பேசினார். சந்திப்புக்குப் பிறகு செய்தியாளர்களிடம் பேசிய சீமான், 'சங்கி என்றால், சகதோழன் என்று பொருள்' என விளக்கம் கொடுத்தது பெரும் விமர்சனத்துக்குள்ளானது.

## ஹெச்.ராஜாவுக்குச் சிறைத் தண்டனை!



பா.ஜ.க தலைவர் அண்ணாமலை, லண்டனுக்குச் சென்றதையடுத்து தமிழக பா.ஜ.கவின் `ஒருங்கிணைப்புக் குழுத் தலைவர்' பதவி ஹெச்.ராஜாவுக்குக் கிடைத்தது. ஆனால், 2018ல் கனிமொழியை விமர்சித்தது மற்றும் 'பெரியார் சிலையை உடைப்பேன்' எனப் பேசியது குறித்தான வழக்கில், ஹெச்.ராஜாவுக்கு டிசம்பர் 2ம் தேதி ஆறு மாத சிறைத் தண்டனை விதித்தது சிறப்பு நீதிமன்றம். இருப்பினும், மேல்முறையீடு செய்யக் கால அவகாசம் வழங்கப்பட்டும் சிறைக்குச் செல்லவில்லை.

## மருத்துவரைக் குத்திய வாலிபர்!



சென்னை கிண்டியிலுள்ள கலைஞர் நூற்றாண்டு நினைவு உயர் சிறப்பு மருத்துவமனையில், டிசம்பர் 13ம் தேதி விக்னேஷ் என்ற இளைஞர், புற்றுநோய் மருத்துவ நிபுணர் மருத்துவர் பாலாஜியைச் சரமாரியாகக் கத்தியால் குத்தினார். நாடு முழுவதும் பெரும் அதிர்வலையை ஏற்படுத்திய இந்தச் சம்பவத்துக்கு மருத்துவர்கள் எதிர்ப்பு தெரிவித்து வேலை நிறுத்தப் போராட்டம் நடத்தினர்.

## அடுத்தடுத்த என்கவுன்ட்டர்கள்!

ஆம்ஸ்ட்ராங் படுகொலை வழக்கில் சரணடைந்த திருவேங்கடம், காவலர்களைத் தாக்க முயற்சி செய்தபோது போலீஸாரால் சுட்டுக் கொல்லப்பட்டார். அதைத் தொடர்ந்து ஏ ப்ளஸ் ரௌடிகளான காக்காத்தோப்பு பாலாஜி, சீசிங் ராஜா ஆகியோரும் போலீஸாரின் என்கவுன்ட்டருக்கு அடுத்தடுத்து பலியாகினர். நாமக்கல்லில் லாரியில் தப்பிச் சென்ற வடமாநிலக் கொள்ளை கும்பல்மீது போலீஸ் நடத்திய துப்பாக்கிச்சூட்டில் ஒருவர் பலியானார்.

## திருப்பி அனுப்பப்பட்ட கேரள மருத்துவக்கழிவுகள்!



தமிழகத்திலிருந்து கனிம வளங்கள் தொடர்ந்து கேரளாவுக்குக் கடத்திச் செல்லப்படுவதும், அங்கிருந்து நச்சுத்தன்மைகொண்ட பலவிதக் கழிவுகள் இங்கு கொண்டுவந்து கொட்டப் படுவதும், கடந்த பத்தாண்டுக்காலமாகத் தொடர்ந்து நடந்துவருகிறது. இந்த நிலையில், நெல்லை மாவட்டத்தில் கேரள மருத்துவக்கழிவுகள் கொட்டப்பட்ட விவகாரம் பெரும் சர்ச்சையாகி, வரலாற்றில் முதன்முறையாக 40 டன் நச்சு மருத்துவக்கழிவுகள் கேரளாவுக்கே திருப்பி அனுப்பப்பட்டன!



## ஈ.வி.கே.எஸ்.இளங்கோவன் மரணம்!

காங்கிரஸ் கட்சியின் மூத்த தலைவர்களில் ஒருவரான ஈ.வி.கே.எஸ். இளங்கோவன், டிசம்பர் 15ம் தேதி உடல்நலக் குறைவால் காலமானார். ஈரோடு கிழக்கு சட்டமன்றத் தொகுதி எம்.எல்.ஏவாக இருந்த அவரின் மகன் திருமகனின் இறப்புக்குப் பிறகு, இடைத்தேர்தலில் போட்டியிட்டு வெற்றிபெற்றிருந்தார் ஈ.வி.கே.எஸ். தற்போது ஈரோடு கிழக்குத் தொகுதி மீண்டும் காலியாகியிருக்கிறது.

www.keelainews.in

# இந்தியாவின் விடிவெள்ளி



**அடக்கம் அமரருள் உய்க்கும்; பெருக்கத்து வேண்டும் பணிவு என்றெல்லாம் வள்ளுவப் பேராசான் குறிப்பிட்டது பலநூற்றாண்டுகளுக்குப் பிறகு பிறந்து இருக்கும் டாக்டர் மன்மோகன் சிங்கிற்காகத்தானோ என்று நம்மை நினைக்க வைக்கின்றன. மறைந்த இந்தியாவின் முன்னாள் பிரதமர், எந்தவொரு கூட்டத்திலும் தவறியும்கூடத் தன்னைப் பற்றியோ, தனது சாதனைகள் பற்றியோ தம்பட்டம் அடித்துக் கொண்டதில்லை என்பதை நினைக்கும்போது, இப்படியும்கூட ஒருவரால் அரசியல் தளத்தில் நீண்ட காலம் பயணிக்க முடிந்திருக்கிறது என்று வியப்படைய வைக்கிறது.**

1971இல் இந்திய அரசின் தலைமைப் பொருளாதார ஆலோசகராக அவரை நியமித்தவர் அன்றைய பிரதமர் இந்திரா காந்தி என்பதும், இந்தியாவின் பொருளாதாரத்தை வழிநடத்துவதில் அப்போதிலிருந்து அவர் பங்களிப்பு வழங்கி வந்திருக்கிறார் என்பதும் வெளியில் அதிகம் பேசப்படாத நிஜங்கள். 1982 முதல் 1985 வரை இந்திய ரிசர்வ் வங்கியின் ஆளுநராகவும் இருந்திருக்கிறார் அவர்.

டாக்டர் மன்மோகள் சிங் நிதியமைச்சரானதற்கு ஒரு சுவாரஸ்யமான பின்னணி உண்டு. நிதி நெருக்கடியைச் சமாளித்து இந்தியப் பொருளாதாரத்தை மீட்டெடுக்க டாக்டர் மன்மோகன் சிங்கை நிதியமைச்சர் பதவிக்குப் பரிந்துரைத்தவர் அன்றைய குடியரசுத் தலைவராக இருந்த ஆர்.வெங்கட்ராமன்.

இந்தியப் பொருளாதாரத்தை புதை குழியில் இருந்து மீட்டெடுக்க பொருளாதார தாராளமயக் கொள்கையை அறிமுகப்படுத்த முடிவெடுத்தனர் பிரதமர் பி.வி.நரசிம்ம ராவும், டாக்டர் மன்மோகன் சிங்கும். இந்தியா மிக இக்கட்டான நிதி நெருக்கடியில் சிக்கிக் கொண்டபோது, சமீபத்தில் இலங்கையில் ஏற்பட்டதுபோல திவால் நிலை ஏற்படாமல் காப்பாற்றிய பெருமை அவர்களுக்கு உண்டு. முதலீடுகள் வந்து குவியத் தொடங்கின. அனைத்துத் துறைகளிலும் மாயாஜால மாற்றங்கள் ஏற்பட்டு இன்று இந்தியா உலகின் ஐந்தாவது பெரிய பொருளாதாரமாகத் திகழ்கிறது என்றால், நாம் நன்றிக்கடன் செலுத்த வேண்டியது அந்த இருவருக்கும்தான்.

அரசியலுடன் எந்தவிதத் தொடர்பும் இல்லாத ஒருவர் நிதியமைச்சராவது மட்டுமல்ல, வெற்றிகரமாக பத்து ஆண்டுகள் பிரதமராகவும் இருந்து சாதைன படைக்க முடிந்தது என்றால், அதற்கு அதிருஷ்டம் காரணம் என்று சொல்லிவிட முடியாது. உழைப்பு, திறமை, அடக்கம் உள்ளிட்ட

பல குணநலன்கள் அனைத்தும் ஒருசேர அமைந்திருந்தன. நேரு குடும்பத்தைச் சாராத ஒருவர் தொடர்ந்து 10 ஆண்டுகள் பிரதமராக இருக்க முடிந்தது என்பதேகூட ஒரு சாதனைதான்.

சோனியா காந்தி ஏன் பிரதமராகவில்லை?, அவர் தனக்குப் பதிலாக டாக்டர் மன்மோகன் சிங்கை ஏன் பிரதமராக்கினார்? என்பவை தேவையற்ற விவாதங்கள். பிரதமராகப் பத்து ஆண்டுகள், கூட்டணி ஆட்சிக்குத் தலைமை வகித்து மக்களவை உறுப்பினராக இல்லாத ஒருவரால் தாக்குப் பிடிக்க முடிந்தது என்பதுதான் கவனிக்க வேண்டிய ஆச்சரியம்.

ஏதோ பதவியைத் தக்க வைத்துக் கொண்டார் எனும்படியான ஆட்சியாக அவரது 10 ஆண்டுகால ஆட்சி இருக்கவில்லை. இந்திய அமெரிக்க அணுசக்தி ஒப்பந்தம், இந்தியாவின் மீதான சர்வதேசத் தீண்டாமையை அகற்றியது என்பதும், பொருளாதாரத் தடைகளைத் தகர்த்தது எரிந்தது என்பதும் மறுத்துவிடக் கூடியவை அல்ல.

மகாத்மா காந்தி ஊரக வேலைவாய்ப்புத் திட்டம், தகவல் அறியும் உரிமைச் சட்டம், அனைவருக்கும் கட்டாயக் கல்வித் திட்டம், தேசிய உணவு பாதுகாப்புத் திட்டம் உள்ளிட்ட வரலாற்றுச் சிறப்புமிக்க பல சாதனைகளை அவரால் செய்ய முடிந்தது. 33 ஆண்டுகள் மாநிலங்களவையில் உறுப்பினராகத் தொடர்ந்த டாக்டர் மன்மோகன் சிங், 1998 முதல் 2004 வரையிலும் மாநிலங்களவை எதிர்க்கட்சித் தலைவராகவும் இருந்திருக்கிறார்.



சர்வதேச அளவில் இந்தியாவை வலிமையான பொருளாதாரமாகவும், மதிப்புக்குரிய நாடாகவும் உயர்த்தியவர் டாக்டர் மன்மோகன் சிங். அமெரிக்கா 2008இல் மிகப் பெரிய பொருளாதார நெருக்கடியில் சிக்கியபோது, அன்றைய அதிபர் ஜார்ஜ் புஷ், டாக்டர் மன்மோகன் சிங்கை வெள்ளை மாளிகைக்கு அழைத்து ஆலோசனை கேட்டார் என்பது குறித்து அவர் வெளியில் சொல்லவில்லை; வாஷிங்டன் போஸ்ட் வெளிப்படுத்தியது.

தன்னைப் பற்றிய விமர்சனங்களுக்கோ, குற்றச்சாட்டுகளுக்கோ அவர் பதில் சொல்லவில்லை. ஆனால் அவையில் அமர்ந்து அமைதியாக எதிர்க்கட்சிகள் முன்வைக்கும் தாக்குதல்களை எதிர்கொண்டார்.

அமைச்சரவை முடிவெடுத்து நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்ய இருந்த மசோதாவை, அவரது கட்சியின் எம்.பி.யும், நேரு குடும்ப வாரிசுமான ராகுல் காந்தி பொதுவெளியில் கிழித்து எரிந்து அவரை அவமானப்படுத்தியபோது, பிரதமர் மன்மோகன் சிங் ஐ.நா. சபையின் கூட்டத்துக்காக நியூயார்க்கில் சர்வதேசத் தலைவர்கள் மத்தியில் இருந்தார்; அமைதி காத்தாரே தவிர ஆத்திரப்படவில்லை. சாக்கடையில் விழுந்தாலும், சந்தனத்தில் விழுந்தாலும் எதுவுமே ஒட்டிக்கொள்ளாமல் எழுந்துவரும் நிழல்போல, அவர் தலைமை வகித்த கூட்டணி மீது ஒன்றன் பின் ஒன்றாக எழுந்த எந்தவொரு குற்றச் சாட்டும் பிரதமராக இருந்த டாக்டர் மன்மோகன் சிங்கின் மீது ஒட்டிக்கொள்ள வில்லை. அவரது நேர்மை சந்தேகத்துக்கு அப்பாற்பட்டதாக இருந்தது.

மன்மோகன் சிங்கை, 'மன்மௌன சிங்' என்று விமர்சித்தபோதுகூட அவரது மௌனம் கலையவில்லை; மாறாக, புன்முறுவலால் மலர்ந்தது; அதை 'நிஷ்காமிய ஞானம்' என்பதா, இல்லை அவரை 'ஸ்திதப் பிரக்ஞன்' என்று போற்றுவதா? இரண்டுமேதான்!

# நண்பர், ஆலோசகர், வழிகாட்டியை இழந்துவிட்டேன்

**சோனியா காந்தி கருத்து**



காங்கிரஸ் முன்னாள் தலைவர் சோனியா காந்தி வெளியிட்ட அறிக்கையில் கூறியிருப்பதாவது: ஞானம், எளிமை, நேர்மையான தலைவரான மன்மோகன் சிங்கை இழந்து விட்டோம். அவர் காங்கிரஸுக்கு கலங்கரை விளக்கமாக இருந்தார். அவரது தொலைநோக்கு பார்வையால் கோடிக்கணக்கான இந்தியர்களின் வாழ்வில் மாற்றம் ஏற்பட்டது. இந்தியா மட்டுமன்றி உலகம் முழுவதும் அவர் போற்றி புகழப்பட்டார்.

எனது நண்பராக, ஆலோசகராக, வழிகாட்டியாக மன்மோகன் சிங் விளங்கினார். அவரது மறைவு எனக்கு மிகப்பெரிய இழப்பு ஆகும். சமூக நீதி, மதச்சார்பின்மை, ஜனநாயகத்தை காப்பாற்ற அவர் தனது வாழ்நாள் முழுவதும் போராடினார். அவரது மறைவால் ஏற்பட்டிருக்கும் வெற்றிடத்தை யாராலும் நிரப்ப முடியாது. நாட்டின் வளர்ச்சியில் அவரது பங்களிப்பது அளப்பரியது. இந்திய மக்களும் காங்கிரஸும் அவரை நினைத்து பெருமிதம் கொள்கிறது. இவ்வாறு சோனியா காந்தி தெரிவித்துள்ளார்.



# பல்கலை கழகமா? பாலியல் கூடமா?

**சென்னை அடையாறில் ஆளுநர் மாளிகை அருகே 189 ஏக்கர் பரப்பளவில் அண்ணா பல்கலைக்கழகம். 15,000 மாணவ மாணவிகள் இளநிலை, முதுநிலை பட்டப்படிப்புகள் பி.எச்டி ஆராய்ச்சி படிப்புகள் படிக்கின்றனர்.. 3500 பேர்கள் பணியாற்றுகின்றார்கள். 200 கட்டடங்கள் உள்ளன. 180 ஆய்வுக்கூடங்கள் இயங்குகின்றன. இப்படி வரலாற்று சிறப்புமிக்க அண்ணா பல்கலைக்கழகம் கடந்த இரண்டு நாட்களாக ஊடகங்களின் தலைப்புச் செய்தி ஆகிவிட்டது.**

அண்ணா பல்கலைக்கழகம் சாதனை ஏதும் செய்யவில்லை, பல்கலை வளாகத்தில் உள்ளேயே கல்லூரி மாணவி ஒருவர் பிரியாணி கடை உரிமையாளர் ஒருவரால் பாலியல் பலாத்காரத்துக்கு ஆட்கொள்ளப்பட்டார்.

இந்த அதிர்ச்சிகரமான சம்பவத்திலிருந்து இன்னும் தமிழகம் வெளியே வரவில்லை. இன்னும் சொல்லப்போனால் இதன் அதிர்வுஅலை இந்தியா முழுவதும் பரவி இருக்கிறது என்று கூட சொல்லலாம்.

அண்ணா பல்கலைக்கழக விடுதியில் தங்கி இருக்கும் பொறியியல் படிக்கும் மூன்றாம் ஆண்டு மாணவருக்கும் இரண்டாம் ஆண்டு மாணவிக்கும் காதல். 23 ஆம் தேதி இரவு 8 மணிக்கு பல்கலைக்கழகத்தில் வளாகத்தில் ஒதுக்குப்புறமான இடத்தில் முதலில் பேசிக் கொண்டிருந்தார்கள். காதல் வசப்பட்டு இருவருமே எல்லை மீறி இருக்கிறார்கள்.

இதை நோட்டமிட்டு பார்த்த ஒருவர் இதை அப்படியே வீடியோ எடுத்து அவர்கள் இருவர் முன்பும் செல்பேசியில் எடுத்திருந்த வீடியோவை காண்பித்து இப்போதே உங்கள் அப்பா அம்மாவுக்கு இந்த விஷயத்தை சொல்கிறேன். உனக்கு டிசி வாங்கி தருவேன். இனிமேல் படிக்கவே முடியாது என்று மிரட்டி இருக்கிறார்.

மிரண்டு போன இருவரும் கெஞ்ச வீடியோ எடுத்தவர் அப்படி என்றால் எனக்கும் நீ அட்ஜஸ்ட்மெண்ட் செய்து கொள் அப்போதுதான் விடுவேன் என்று மிரட்ட இருவரும் கெஞ்ச, அப்போது அந்த மிரட்டல் ஆசாமி காதலரை அடித்து விரட்டி விட்டார் என்ற தகவல் வெளியானது. .

சம்பவம் நடந்தது 23ஆம் தேதி இரவு..... மறுநாள் 24ஆம் தேதி அந்த மாணவி காவல்துறை கட்டுப்பாட்டு அறை எண் 100க்கு தொடர்பு கொண்டு டிசம்பர் 23ஆம் தேதி இரவு அண்ணா பல்கலைக்கழக வளாகத்துக்கு வந்த அடையாளம் தெரியாத நபர் என்னை மிரட்டி நகை உள்ளிட்ட பொருட்களை பறித்துக் கொண்டு சென்று விட்டார் என்று மட்டும் புகார் அளித்திருக்கிறார்.



இந்த புகாரின் விவரம் அழைப்பு வந்த தொடர்பு எண் புகார் அளித்த மாணவியின் பெயர் ஆகிய விவரங்கள் கோட்டூர்புரம் காவல்துறைக்கு தெரியப்படுத்தப்பட்டது.

இதைத் தொடர்ந்து கோட்டூர்புரம் உதவி ஆய்வாளர் அந்த மாணவியை தொடர்பு கொண்டு நான் கோட்டூர்புரம் காவல் நிலையத்தில் இருந்து எஸ்ஐ பேசுகிறேன் உங்கள் புகார் சம்பந்தமாக உங்களை நான் விசாரிக்க வேண்டும் என்று சொல்லிவிட்டு 24ஆம் தேதி காலை அண்ணா பல்கலைக்கழகம் சென்றார்.

அங்கு மாணவி படிக்கும் துறையின் பேராசிரியர்களிடம் இது பற்றி விசாரித்த போது தான் அவர்களுக்கு இப்படி ஒரு சம்பவம் நடந்திருக்கிறது தெரிந்திருக்கிறது. இப்போ எல்லோரும் தேர்வு எழுதிக் கொண்டிருக்கிறார்கள் நீங்கள் மாலை வாருங்கள் என்று சொல்லி அனுப்பி இருக்கிறார்கள் பேராசிரியர்கள்.

அண்ணா பல்கலைக்கழகத்தில் இப்படி ஒரு சம்பவம் நடந்திருக்கிறது எனவே இது நிச்சயம் பேசும் பொருளாகும் என்று உஷாரான எஸ்ஐ இது பற்றி உதவி ஆணையர் , துணை ஆணையர் ஆகியோரிடம் சொல்ல அவர்களும் உஷாரானார்கள்.

மாலையில் அந்த மாணவியிடம் போலீஸ் விசாரித்த போது அவன் என்னை நகைகளை மட்டும் பறித்து கொள்ளவில்லை என்னை கட்டிப்பிடித்து என்னை சீரழித்து விட்டான் என்று அந்த மாணவி கதறி அழ ஆரம்பித்தார்.

இது மிகவும் சீரியசான விஷயம் உஷார் ஆன போலீஸ் அந்த மாணவியிடம் அந்த நபர் பற்றிய அங்க அடையாளங்களை விசாரித்து பல்கலைக்கழகம் வளாகத்தில் உள்ள சிசிடிவி கேமராக்களை ஆய்வு செய்தனர் அது சந்தேகப்படும்படி இருந்த சிலரை மாணவியுடன் காட்டிய போது மாணவி ஒருவனை அடையாளம் காண்பித்து இவன்தான் என்று ஆவேசமாக சொன்னார்.

போலீசார் அது பிரியாணி கடை நடத்தும் ஞானசேகரன் கோட்டூர்புரத்தில் உள்ளவன் ஏற்கனவே அவன் மீது வழக்குகள் உள்ளவன் குற்ற பின்னணி கொண்டவன் தான் என்றாலும் அவனுக்கு ஆளுங்கட்சி பின்பலம் உண்டு என்பதும் அவர்களுக்கு தெரியும்.

ஞானசேகரன் போலீஸ் பிடித்து விசாரித்த போது இருங்க சார் நான் மினிஸ்டர் கிட்ட பேசிட்டு வரேன், மாவட்டத்திடம் பேசி வரேன், என்றெல்லாம் சொல்ல பேசிக்கலாம் பேசிக்கலாம் வா என்று அவனை அப்படியே அள்ளி தூக்கி போட்டு கொண்டு சென்று விட்டார்கள்.

அண்ணா பல்கலைக்கழக மாணவி பாலியல் வன்கொடுமை செய்யப்பட்டார் என்ற செய்தி தீயாகப் பரவியது. போலீசார் அவன் செல்பேசியை ஆராய்ந்த போது ஆபாச படங்களாக அதில் நிறைய இருந்தது. இந்த மாணவியையும் அவன் படம் பிடித்து வைத்திருந்தான்.

ஞானசேகரன் மீது 14 வழக்குகள் உள்ளன. பெண்கள் சம்பந்தமான பாலியல் புகார் சில சமயம் வந்த போது மேலிட அழுத்தத்தால் அவன் தப்பி இருக்கிறான். அது காவல்துறை முதல் முதலில் வெளியிட்ட செய்தி குறிப்பில் இவர் வேறு ஏதாவது குற்ற செயலில் ஈடுபட்டு இருக்கிறாரா என்று விசாரணை நடைபெறுகிறது என்று மட்டும் தெரிவித்தது

இந்த விஷயம் கேள்விப்பட்ட மாணவர் அமைப்பு அண்ணா பல்கலைக்கழக எதிரே ஆர்ப்பாட்டம் நடத்தியது. அதிமுக பாஜக இரண்டு கட்சிகளும் தொடர் போராட்டம் நடத்தி வருகிறது.

சட்ட அமைச்சர் நிருபர்களை சந்தித்து பேசும் போது அவருக்கும் திமுகவுக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்று மறுத்து இருக்கிறார்.

சமூக வலை தளத்தில் பிரியாணி ஆசாமி ஞானசேகரன் மா.சுப்பிரமணியம், துணை முதல்வர் ஆகியோருடன் இருக்கும் புகைப்படங்கள் வலம் வருகின்றன.



பாஜக அண்ணாமலை இந்த குற்றத்தை கையிலெடுத்து சாட்டையடி முதல், செருப்பு போடப் போவதில்லை என்று சபதம் முதல், திமுகவுக்கு எதிரான போர் தொடுத்து இருக்கிறார்.

ஒரு தனிநபர் குற்றம் செய்ததற்கு கட்சிப் பொறுப்பேற்காது என்பது எல்லோருக்கும் தெரிந்த விஷயம் தான். அவர் திமுக உறுப்பினர் தான் ஆனாலும், இந்த குற்றத்தை அவர் செய்திருக்கிறார் என்பது தெரிந்ததும் உடனே அவரை கைது நடவடிக்கை எடுத்தோம். எங்கள் கட்சி உறுப்பினர் என்பதால் அவர் செய்த செயலை நாங்கள் ஏற்றுக் கொள்ளவில்லை என்று வெளிப்படையாக சொல்வதில் திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு என்ன பிரச்சனை என்று தெரியவில்லை.

திமுக மட்டுமல்ல எந்த ஆளும் கட்சியும் உடனே அவருக்கும் எங்களுக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்று உடனே கை கழுவி விடுவார்கள்.




# சீறிய ராமதாஸ் கப்சிப் அன்புமணி

## என்னவாகும் பாமகவின் எதிர்காலம்

2026 தேர்தலுக்கான கூட்டணி முடிவை நானே எடுப்பேன் என்பதில் ராமதாஸ் உறுதியாக இருக்கும் நிலையில், அன்புமணி அதை ஏற்றுக்கொள்வாரா என்பது தெரியவில்லை. அதனால், பா.ம.கவின் எதிர்காலம் கேள்விக்குறியாக இருக்கிறது!"

'2026ல், நம் தலைமையிலான கூட்டணி ஆட்சிதான் நடைபெறும்' என்று பா.ம.க நிறுவனர் ராமதாஸ், பா.ம.க தலைவர் அன்புமணி ராமதாஸ் ஆகிய இருவரும் புதுச்சேரியில் நடைபெற்ற பா.ம.கவின் புத்தாண்டு பொதுக்குழு கூட்டத்தில் முழக்கமிட்டார்கள். ஆனால், இந்த முழக்கத்தை எல்லாம் தாண்டி, அவர்கள் இருவருக்குமான மோதல்தான் ஹைலைட் ஆக இருந்தது.

அந்த மோதல், கொள்கை தொடர்பாக எழுந்த மோதல் கிடையாது. அது, பதவி நியமனம் தொடர்பான மோதல். பா.ம.கவில் முக்கியப் பதவியான இளைஞர் சங்கத் தலைவர் பதவி காலியாக இருக்கிறது. அந்தப் பதவிக்கு தன்னுடைய மகள் வழிப் பேரன் முகுந்தனை நியமிப்பதாக பொதுக்குழு கூட்டத்தில் ராமதாஸ் அறிவிக்க, அதற்கு எதிர்ப்பு தெரிவித்தார் அன்புமணி. இதுதான் பிரச்னை.

இந்த நேரத்தில், பா.ம.க தொடங்கப்பட்ட 1989ம் ஆண்டு, டாக்டர் ராமதாஸ் ஐந்து சத்தியங்களைச் செய்தார். அதில் ஒன்று, 'என் வாரிசுகள் கட்சியில் எந்தப் பொறுப்புக்கும் வரமாட்டார்கள்' என்பது. ஆனால், தன் மகன் அன்புமணியை கட்டுக்குள் கொண்டுவந்ததன் மூலம், தனது சத்தியத்தை மீறிவிட்டார் ராமதாஸ். அடுத்ததாக, அன்புமணியின்

மனைவி சௌமியா அன்புமணி 2024 மக்களவைத் தேர்தலில் தர்மபுரி தொகுதியில் வேட்பாளராக நிறுத்தப்பட்டார். அதன் மூலம் இன்னொரு முறை ராமதாஸின் சத்தியம் மீறப்பட்டது.

இப்போது தன் மகள் வழிப்பேரனை கட்சியின் முக்கியப் பதவிக்கு அறிவித்தபோது, கட்சிக்குள் மோதல் வெடித்திருக்கிறது. கடந்த 14 ஆண்டுகளாக இறங்குமுகமாக இருக்கும் இந்த கட்சிக்கு, இந்த மோதல் மேலும் ஒரு பின்னடைவுக்கு வழிவகுக்கிறது.

ஒரு காலத்தில் மத்திய அமைச்சரவையில் இடங்கள், மாநிலத்தில் கணிசமான எம்.எல்.ஏக்கள் என்று அரசியலில் பா.ம.க கோலோச்சியது. குறிப்பாக, 1998ம் ஆண்டு மத்திய அமைச்சரவையில் பா.ம.க இடம்பெற்றது. அப்போது, அடல் பிஹாரி வாஜ்பாய் தலைமையிலான அமைச்சரவையில் பா.ம.கவின் தலித் எழில்மலை சுகாதாரம் மற்றும் குடும்ப நலத்துறை இணை அமைச்சராகவும், என்.டி.சண்முகம் மத்திய நிலக்கரி துறை இணை அமைச்சராகவும் ஆனார்கள்.







1999ம் ஆண்டு, பொன்னுசாமி மத்திய பெட்ரோலியம் மற்றும் இயற்கை எரிவாயு துறை இணை அமைச்சராக ஆனார். 2002ல், ஏ.கே.மூர்த்தி ரயில்வே இணை அமைச்சராக இருந்தார். 2004ம் ஆண்டு அன்புமணி ராமதாஸ் மத்திய சுகாதாரம் மற்றும் குடும்ப நலத்துறை அமைச்சராகவும், ஆர்.வேலு மத்திய ரயில்வே இணை அமைச்சராகவும் இருந்தார்கள்.

அதே நேரம், மாநிலத்திலும் கணிசமான எம்.எல்.ஏக்களைப் பெற்றிருந்தார்கள். குறிப்பாக, 2001 சட்டமன்றத் தேர்தலில் அ.தி.மு.கவுடன் கூட்டணி வைத்து 20 எம்.எல்.ஏக்களைப் பெற்றார்கள். 2006ல் தி.மு.கவுடன் கூட்டணி வைத்து 18 இடங்களில் வென்றார்கள். அடுத்ததாக 2011ல் வெறும் மூன்று இடங்களைப் பெற்ற பா.ம.க, 2016ல் ஜீரோவுக்குப் போய்விட்டது. 2021ல் ஐந்து இடங்களைப் பெற்றது.

தர்மபுரியில் திவ்யா இளவரசன் காதல் விவகாரம் பெரும் பிரச்னையாக வெடித்தது. அதைத் தொடர்ந்து மிகப்பெரிய சாதிய வன்முறை நிகழ்ந்தது. அதன் மூலம், சாதி ரீதியான அணிதிரட்டலை பா.ம.க செய்தது. அந்தச் சூழலில், 2014ல் மக்களவைத் தேர்தல் வந்தது. தர்மபுரி தொகுதியில் போட்டியிட்டு வெற்றிபெற்றார் அன்புமணி. அடுத்து வந்த, 2019, 2024 என இரண்டு மக்களவைத் தேர்தலிகளிலும் பா.ம.கவுக்கு ஜீரோதான் கிடைத்தது. 'நாங்கள் இருக்கும் கூட்டணிதான் வெற்றிக்கூட்டணி' என்று சொல்லி, அ.தி.மு.க., தி.மு.க என்று மாறி மாறி கூட்டணி வைத்து வெற்றியைப் பெற்றுவந்த பா.ம.கவுக்கு 2011க்குப் பிறகு 'பவர்' குறையத் தொடங்கியது.

1989ம் ஆண்டு கட்சி ஆரம்பிக்கப்பட்டது முதல், தன் கட்டுப்பாட்டிலேயே கட்சியை வைத்திருக்கிறார் நிறுவனர் ராமதாஸ். 2022ம் ஆண்டு, பா.ம.கவின் தலைவராக நீண்ட காலம் இருந்துவந்த கோ.க.மணியை மாற்றிவிட்டு, அந்த இடத்துக்கு தன் மகன் அன்புமணியைக் கொண்டுவந்தார் ராமதாஸ். ஆனால், தலைவர் பதவிக்கு வந்தாலும், அன்புமணிக்கு முழுமையான அதிகாரம் வழங்கப்படவில்லை. கட்சி தொடர்பான முக்கிய முடிவுகளை பெரும்பாலும் ராமதாஸே எடுப்பதாகவும், அதில் அன்புமணிக்கு பெரும் வருத்தம் இருக்கிறது என்றும் பா.ம.க வட்டாரத்தில் சொல்கிறார்கள்.

2024 மக்களவைத் தேர்தலுக்கான கூட்டணியை முடிவு செய்வதிலும்கூட, ராமதாஸுக்கும், அன்புமணிக்கும் இடையே கருத்து வேறுபாடுகள் இருந்தன. பா.ஜ.கவுடன் கூட்டணி வைப்பதை ராமதாஸ் விரும்பவில்லை. அதற்கு பல காரணங்கள் இருக்கின்றன. மத்தியிலிருக்கும் பா.ஜ.க அரசு, தமிழுக்கும் தமிழ்நாட்டுக்கும் எதிராக பல நடவடிக்கைகளைச் செய்துவரும் நிலையில், கூட்டணியில் இருக்கும் காரணத்திற்காக அவற்றை விமர்சிக்க முடியவில்லை என்று ராமதாஸ் நினைக்கிறார். அதேபோல, வட மாநிலங்களில் பா.ஜ.க செல்வாக்காக இருந்தாலும், அந்தக் கட்சியுடன் தமிழ்நாட்டில் கூட்டணி வைப்பதால் நமக்கு என்ன பலன் என்றும் அவர் கருதுகிறார்.

எனவே, அ.தி.மு.கவுடன் கூட்டணி வைப்பதற்குத்தான் ராமதாஸ் விரும்பினார். அதனால்தான், அ.தி.மு.கவின் முன்னாள் அமைச்சர் சி.வி.சண்முகத்துடன் பேச்சுவார்த்தை எல்லாம் நடத்தினார்கள். அதில், அ.தி.மு.கவுடன் கூட்டணி முடிந்துவிட்டது என்றுகூட ஒரு கட்டத்தில் செய்திகள் வந்தன. ஆனாலும், பா.ஜ.கவுடன் போவது என்ற அன்புமணியின் விருப்பம்தான் கடைசியில் நிறைவேறியது.

'பா.ஜ.க மத்தியில் ஆட்சியில் இருக்கிறது. மீண்டும் பா.ஜ.கவின் ஆட்சிதான் வரும். எனவே, பா.ஜ.கவுடன் கூட்டணி வைத்தால், பா.ம.கவின் எதிர்காலத்துக்கு நல்லது' என்றெல்லாம் சொல்லி கூட்டணிக்கு அன்புமணி வலியுறுத்தியிருக்கிறார். அதனால், வேறு வழியில்லாமல் ராமதாஸும் அதற்கு ஒப்புக்கொண்டுவிட்டதாக கட்சி வட்டாரத்தில் சொன்னார்கள்.

ராமதாஸின் கணிப்புதான் நிதர்சனமானது. பா.ஜ.க கூட்டணிக்கு தமிழ்நாட்டில் ஒரு சீட் கூட கிடைக்கவில்லை. தர்மபுரியில் அன்புமணியின் மனைவி சௌமியா அன்புமணி கணிசமான வாக்குகளைப் பெற்றும் அவருக்கு வெற்றி

கிடைக்கவில்லை. எனவே, 2026 சட்டமன்றத் தேர்தலுக்கான கூட்டணியை அமைக்கும் பொறுப்பை தானே பார்த்துக்கொள்வதாக ராமதாஸ் கூறிவிட்டார். மேலும், கடந்த காலத்தில் செய்த கூட்டணித் தவற்றை இனிமேல் செய்ய மாட்டோம் என்றும் அவர் சொல்லியிருக்கிறார். அப்படியென்றால், பா.ஜ.க கூட்டணியிலிருந்து பா.ம.க வெளியேறப்போகிறது என்றுதான் பார்க்க வேண்டியிருக்கிறது.

இதற்கிடையில், ராமதாஸ் தன் மகள் வழிப் பேரன் முகுந்தனை பா.ம.க இளைஞர் சங்கத்தின் தலைவராக நியமிக்கும் விவகாரம் பூகம்பம் போல வெடித்துவிட்டது. முகுந்தனை இளைஞர் சங்கத் தலைவராக்க வேண்டுமென்பது ராமதாஸின் முடிவு. அதில் அன்புமணிக்கு உடன்பாடு இல்லை. இந்த விவகாரம் கடந்த ஒரு மாத காலமாக உள்ளுக்குள் புகைந்துகொண்டிருந்தது. அந்தப் பிரச்னை தற்போது உச்சக்கட்டத்தை அடைந்துவிட்டது.

2024 மக்களவைத் தேர்தலில் சௌமியா அன்புமணியை தர்மபுரி வேட்பாளராக நிறுத்தியபோது, அதில் ராமதாஸுக்கும் அன்புமணிக்கும் இடையே கருத்து வேறுபாடு இருந்திருக்கிறது. அப்போது, சௌமியாவுக்கு சீட் கொடுத்தால், முகுந்தனுக்கு கட்சியில் முக்கியப் பொறுப்பை கொடுக்க வேண்டும் என்று ராமதாஸ் கூறியிருக்கிறார். அதற்கு சரி என்று அப்போது கூறிய அன்புமணி, இப்போது எதிர்ப்பு தெரிவிக்கிறார் என்கிறார்கள் பா.ம.கவின் முக்கிய நிர்வாகிகள்.




"முகுந்தனுக்கு பதவி கொடுக்க அப்போது சம்மதம் தெரிவித்துவிட்டு, இப்போது எதிர்ப்பது ஏன் என்பதுதான் ராமதாஸின் கோபம். அன்புமணியைப் பொறுத்தளவில், இப்போது முகுந்தனுக்கு முக்கிய பதவி கொடுத்தால், 'குடும்பக் கட்சி' என்ற விமர்சனம் அதிகமாக எழுவதற்கு வாய்ப்பு இருக்கிறது. எனவே, 2026 சட்டமன்றத் தேர்தலின்போது முகுந்தனுக்கு வாய்ப்பு கொடுக்கலாம் என்று சொல்லியிருக்கிறார். ஆனால், தனது உடல் நலப் பிரச்னைகள், வயது முதிர்வு போன்ற காரணங்களால், இப்போதே முகுந்தனை கட்சிக்குள் கொண்டுவந்துவிட வேண்டும் என்ற முடிவில் ராமதாஸ் உறுதியாக இருக்கிறார்" என்று பா.ம.க வட்டாரத்தில் சொல்கிறார்கள்.

சமீபத்தில், 'வன்னியர்களுக்கு 15 சதவிகித இடஒதுக்கீடு வழங்கினால், தி.மு.க அரசுக்கு நிபந்தனையற்ற ஆதரவு வழங்குவோம்' என்று அன்புமணி பேசினார். அதில், ராமதாஸுக்கு உடன்பாடு இல்லை. இன்னும் 10.5 சதவிகித இடஒதுக்கீட்டையே கொடுக்காதபோது, 15 சதவிகித இடஒதுக்கீட்டை எப்படிக் கொடுப்பார்கள் என்பது ராமதாஸின் கேள்வி. எனவே, தி.மு.கவுக்கு வலிந்துபோய் ஏன் ஆதரவு கொடுக்க வேண்டும் என்று ராமதாஸ் நினைப்பதாக பா.ம.கவின் முக்கிய நிர்வாகிகள் சொல்கிறார்கள்.

'நான் ஆரம்பித்த கட்சி. என்னுடைய கட்சி' என்று டாக்டர் ராமதாஸ் கூறினாலும், அன்புமணியின் கைதான் கட்சிக்குள் ஓங்கியிருக்கிறது. கட்சியின் தலைவராக அன்புமணி இருப்பதால், அவருக்குப் பின்னால்தான் பெரும்பாலான நிர்வாகிகள் இருக்கிறார்கள். மேலும், குடும்பத்திலும் அவர் தலைவராக வந்துவிட்டார். பல முக்கிய விவகாரங்களில் அன்புமணியின் ஆலோசனையைக் கேட்டுத்தான் குடும்பத்தில் முடிவு எடுக்கிறார்கள். எனவே, கூட்டணி உள்ளிட்ட முடிவுகளை எதிர்காலத்தில் அன்புமணிதான் எடுக்கப்போகிறார் என்று பா.ம.கவில் முக்கிய நிர்வாகிகள் சொல்கிறார்கள்.

புதுச்சேரி பொதுக்குழு கூட்டத்தில் ஏற்பட்ட பிரச்னைக்குப் பிறகு தைலாபுரத்தில் சமாதானப் படலம் நடந்திருக்கிறது. அப்போதும், அன்புமணியை ராமதாஸ் முகம் கொடுத்து பார்க்கவில்லை என்று செய்திகளும், புகைப்படங்களும் வெளியாகின. தந்தையும், மகனும் சமாதானம் அடைகிறார்களா, இல்லையா என்பது ஒருபுறம் இருந்தாலும், 2026ல் வரவிருக்கும் சட்டமன்றத் தேர்தலில் பா.ம.கவின் வெற்றி குறித்த கவலை பா.ம.கவினருக்கு இருக்கிறது.

விடுதலைச் சிறுத்தைகள் கட்சி தி.மு.க கூட்டணியிலிருந்து நான்கு சட்டமன்ற உறுப்பினர்களையும், இரண்டு நாடாளுமன்ற உறுப்பினர்களையும் பெற்றிருக்கிறது. இரண்டு பொதுத்தொகுதிகளில் வெற்றிபெற்றிருக்கிறார்கள். அது மட்டுமல்ல, 8 சதவிகித வாக்குகளைப் பெற்று மாநிலக் கட்சியாக தேர்தல் ஆணையத்தின் அங்கீகாரத்தைப் பெற்றுவிட்டார்கள். ஆனால், பா.ம.கவின் வாக்கு வங்கி ஒவ்வொரு தேர்தலிலும் சரிந்துகொண்டே வருகிறது. 'நாம் தொடர்ச்சியாகப் பின்னடைவையே சந்திக்கிறோமே' என்ற கவலை பா.ம.கவினருக்கு இருக்கிறது. இதில், குடும்பச் சண்டை மேலும் பின்னடைவை ஏற்படுத்துவதாக இருக்கிறது.



# இந்தியா 2024 ஒரு பார்வை

**இந்தியத் தண்டனைச் சட்டங்களில் வெகு சில மாற்றங்களை மேற்கொண்டு, அதன் பெயர்களையும் வடமொழியில் மாற்றி அமலுக்குக் கொண்டுவந்தது மத்திய அரசு.**

`பாபர் மசூதி இடிக்கப்பட்ட இடத்தில், ராமர் கோயில் கட்டப்பட வேண்டும்' என்ற பா.ஜ.க., ஆர்.எஸ்.எஸ்ஸின் கனவு நிறைவேறிய ஆண்டு இது. கோயில் பணிகள் முழுவதுமாக முடியவில்லை என்றாலும், ஜனவரி 22ல் ராமர் சிலை பிரதிஷ்டையை பிரதமர் மோடியே முன்னின்று நடத்திவைத்தார். `நாடாளுமன்றத் தேர்தலுக்கு முன்பான அரசியல் நாடகம் இது' என விமர்சித்தன எதிர்க்கட்சிகள். ஆனால், தேர்தல் முடிவுகளில் அயோத்தியை உள்ளடக்கிய ஃபைசாபாத் தொகுதியில், சமாஜ்வாடி கட்சியிடம் தோல்வியடைந்தது பா.ஜ.க. புதிதாகக் கட்டப்பட்ட ராமர் கோயிலுக்குள் மழைநீர் ஒழுகியதும் சர்ச்சையானது.

### அந்தர் பல்டி நிதிஷ் குமார்!



கூட்டணித் தாவலில் வல்லவரான பீகார் முதல்வர் நிதிஷ் குமார், `பா.ஜ.கவுக்கு எதிராக அணிதிரண்ட எதிர்க்கட்சிகளின் `இந்தியா' கூட்டணியை உருவாக்கியதே நான்தான்' என்று தம்பட்டம் அடித்துக்கொண்டிருந்தார். ஆனால், இந்த ஆண்டு (ஜன.28) தொடக்கத்தில், `இந்தியா' கூட்டணியைவிட்டு வெளியேறி, பா.ஜ.க தலைமையிலான `என்.டி.ஏ' கூட்டணியில் ஐக்கிய ஜனதா தளத்தை இணைத்துக்கொண்டு, மீண்டும் பீகாரின் முதல்வரானார் நிதிஷ்.

### கைதான முதல்வர்கள்!



ஜனவரி 31ல், சட்டவிரோதப் பணப் பரிவர்த்தனை வழக்கில், ஜார்க்கண்ட் முதல்வர் ஹேமந்த் சோரனைக் கைதுசெய்தது அமலாக்கத்துறை. ஐந்து மாதச் சிறைவாசத்துக்குப் பின்னர் சோரனுக்கு ஜாமீன் வழங்கியது நீதிமன்றம். சிறையிலடைக்கப்பட்ட அனுதாபத்தைக்கொண்டே, சமீபத்தில் நடந்த சட்டமன்றத் தேர்தலில் வென்று மீண்டும் முதல்வரானார் சோரன்.

மார்ச் 21ல், டெல்லி முதல்வர் அரவிந்த் கெஜ்ரிவாலை மதுபானக் கொள்கை வழக்கில், கைதுசெய்தது அமலாக்கத்துறை. சிறையிலிருந்தபோது முதல்வர் பதவியை ராஜினாமா செய்ய மறுத்தவர், செப்டம்பரில்



**வயநாடு நிலச்சரிவு!**

கேரள மாநிலம், வயநாட்டில் ஏற்பட்ட நிலச்சரிவு, சுமார் 400 உயிர்களைப் பலிகொண்டது. சில கிராமங்களையும் விழுங்கியது. மற்ற மாநிலங்களிலும் வெள்ள பாதிப்பு, வெப்ப அலை உள்ளிட்ட இயற்கைப் பேரிடர்களும், ரயில் விபத்துகளும் இந்தியர்களின் உயிர்களைப் பறித்தன. அது போக, உ.பியில் நடந்த போலே பாபா என்ற போலிச் சாமியாரின் மத விழாவில் ஏற்பட்ட கூட்ட நெரிசலில் 121 உயிர்கள் பறிபோயின.

நிபந்தனை ஜாமீனில் வெளிவந்த பிறகு ராஜினாமா செய்தார். சக அமைச்சர் அதிஷியை முதல்வராக்கிவிட்டு, சட்டமன்றத் தேர்தல் பிரசாரங்களில் களமிறங்கினார்.

### தேர்தல் பத்திரங்களுக்குத் தடை!

மத்திய பா.ஜ.க அரசு அறிமுகப்படுத்திய, தேர்தல் பத்திரங்கள் மூலம் நிதி பெறும் திட்டத்தை, `அரசியலமைப்புக்கே எதிரானது' என்று ரத்துசெய்தது சந்திர சூட் தலைமையிலான உச்ச நீதிமன்ற அமர்வு. தேர்தல் பத்திர விவரங்களை வெளியிடுவதில் தாமதம் ஏற்படுத்திய எஸ்.பி.ஐ வங்கிக்கும் பலத்த குட்டு விழுந்தது.

### அமலுக்கு வந்த சி.ஏ.ஏ!




இஸ்லாமியர்கள் பெரும்பான்மையாக இருக்கும் பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான், வங்கதேசம் ஆகிய அண்டை நாடுகளிலிருந்து, மதத் துன்புறுத்தல்களால் வெளியேறி, இந்தியாவில் தஞ்சமடைந்திருக்கும் இந்துக்கள், பார்சிகள், சமணர்கள், பௌத்தர்கள், கிறிஸ்துவர்கள், சீக்கியர்கள் ஆகியோருக்குக் குடியுரிமை வழங்குவதாக, சர்ச்சைக்குரிய சி.ஏ.ஏ சட்டத்தை மார்ச் 11 முதல் அமல்படுத்தியது மத்திய அரசு.

### கர்நாடகாவை உலுக்கிய பாலியல் வழக்கு!

முன்னாள் பிரதமர் தேவகவுடாவின் பேரனும், மதச்சார்பற்ற ஜனதா தளத்தின் முக்கியப் புள்ளியுமான பிரஜ்வல் ரேவண்ணா, பல பெண்களுக்குப் பாலியல் தொல்லை கொடுத்தது தொடர்பான வீடியோக்கள் வெளியாகிப் பெரும் பரபரப்பைக் கிளப்பியது. தற்போது, விசாரணைக் கைதியாக சிறைக் கம்பிகளை எண்ணிக்கொண்டிருக்கும் ரேவண்ணாவுக்கு, விரைவில் தண்டனை கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

### மூன்றாவது முறையாக மோடி ஆட்சி!

`400 தொகுதிகளை வெல்வோம்' என்ற பா.ஜ.கவுக்கு 2024 நாடாளுமன்றத் தேர்தலில்,



பெரும்பான்மைகூடக் கிடைக்கவில்லை. கூட்டணிக் கட்சிகளின் ஆதரவுடன் மூன்றாவது முறையாகப் பிரதமர் அரியணை ஏறினார் நரேந்திர மோடி.

### எதிர்க்கட்சித் தலைவர் ராகுல்!



ராகுல் காந்தியின் `பாரத் ஜோடோ யாத்திரை' களத்தில் ஏற்படுத்திய தாக்கத்தால், 10 ஆண்டுகள் கழித்து எதிர்க்கட்சி அந்தஸ்தைப் பெற்றது காங்கிரஸ். மக்களவை எதிர்க்கட்சித் தலைவராக ராகுல் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

### பா.ஜ.கவுக்கு உதவிய அனில்!



சண்டிகர் மேயர் தேர்தலில், பா.ஜ.க வேட்பாளரை வெற்றியடையச் செய்ய வாக்குச் சீட்டுகளில் திருத்தம் மேற்கொண்டு மோசடி செய்த தேர்தல் அதிகாரி அனிலின் வீடியோ வெளியாகிப் பரபரப்பை ஏற்படுத்தியது. இது தொடர்பான வழக்கில், ``ஆம் ஆத்மி வேட்பாளரே மேயர்'' என நேரடியாக உச்ச நீதிமன்றமே அதிரடியாக உத்தரவிட்டது. தற்போது, வாக்குச்சாவடிகளின் சிசிடிவி காட்சிகளையும், மின்னணு ஆவணங்களையும் ஆய்வுக்கு உட்படுத்துவதைத் தடுக்கும் வகையில், தேர்தல் நடத்தை விதியில் மாற்றங்களை மேற்கொண்டிருக்கிறது மத்திய அரசு.

### அடுத்தடுத்து சிக்கிய அதானி!



ஹிண்டன்பர்க் ஆய்வறிக்கையால், தொழிலதிபர் கௌதம் அதானியின் குழுமப் பங்குகள் ஆட்டம் கண்டன. மேலும், 'இந்திய அதிகாரிகளுக்கு லஞ்சம் கொடுத்து, அமெரிக்க முதலீட்டாளர்களை ஏமாற்றியதாக' அமெரிக்க நீதிமன்றத்தில், அதானிமீது குற்றம் சாட்டப்பட்டது. எதிர்க்கட்சிகள் எவ்வளவோ போராட்டம் நடத்தியும், அதானிக்கு எதிரான விசாரணைக்கு உத்தரவிட மறுத்தது மோடி அரசு.

### அணையாத மணிப்பூர்!

2023ல் தொடங்கிய மணிப்பூர் வன்முறை, கடந்த ஆண்டும் ஓயாமல் தொடர்ந்தது. குறிப்பாக, ஜிரிபாம் மாவட்டத்தில் வெடித்த கலவரம், மீண்டும் மணிப்பூரைப் பதற்றமாக்கியது. கலவரத்தால் பாதிக்கப்பட்ட



மக்களின் வாழ்வாதாரத்தில், எந்த முன்னேற்றமும் ஏற்படவில்லை. பிரதமரும் மணிப்பூரை கடைசிவரை எட்டிப்பார்க்கவில்லை.

நாட்டை உலுக்கிய பெண் மருத்துவர் மரணம்!

ஆகஸ்ட் 9ல், மேற்கு வங்கத்திலுள்ள ஆர்.ஜி.கர் மருத்துவமனையில், பெண் மருத்துவர் ஒருவர் பாலியல் வன்கொடுமை செய்யப்பட்டு கொடூரமாகக் கொல்லப்பட்டார். மம்தா அரசும், காவல்துறையும் இந்தச் சம்பவத்தை மூடி மறைக்கச் சில வேலைகளைச் செய்ய, நாடு முழுவதும் போராட்டங்கள் வெடித்தன. பின்னர் வழக்கு சி.பி.ஐக்கு மாற்றப்பட்டும், இன்றுவரை பெண் மருத்துவர் மரணத்துக்கு நீதி கிடைக்கவில்லை!

### இதயங்களை வென்ற வினேஷ்!



மல்யுத்த வீராங்கனைகளுக்குப் பாலியல் தொல்லை கொடுத்த பா.ஜ.க முன்னாள் எம்.பி பிரிஜ் பூஷணுக்கு எதிராகப் போராடிய வினேஷ் போகத், ஒலிம்பிக் போட்டிகளில் கலந்துகொண்டார். மல்யுத்தத்தில் இறுதிப் போட்டி வரை முன்னேறியவரை, எடை கூடி விட்டதாகச் சொல்லித் தகுதிநீக்கம் செய்தனர். பதக்கம் வெல்லாவிட்டாலும், இந்தியர்களின் இதயங்களை வென்ற வினேஷ் காங்கிரஸ் கட்சியில் தன்னை இணைத்துக்கொண்டு, ஹரியானாவில் எம்.எல்.ஏவாகத் தேர்வானார்.

### தோல்வியில் முடிந்த `ஒரே நாடு ஒரே தேர்தல்'!

இந்தியத் தண்டனைச் சட்டங்களில் வெகு சில மாற்றங்களை மேற்கொண்டு, அதன் பெயர்களையும் வடமொழியில் மாற்றி அமலுக்குக் கொண்டுவந்தது மத்திய அரசு. அதேபோல, `ஒரே நாடு ஒரே தேர்தலை' அமல்படுத்த, இரண்டு சட்டத்திருத்த மசோதாக்களை மக்களவைக்குக் கொண்டுவந்தது மத்திய அரசு. மூன்றில் 2 பங்கு ஆதரவில்லாததால், இரு மசோதாக்களும் தோல்வியடைந்தன. இதைத் தொடர்ந்து நாடாளுமன்றத்தில், அண்ணல் அம்பேத்கர் குறித்து உள்துறை அமைச்சர் அமித் ஷா சர்ச்சைக் கருத்துகளைப் பதிவு செய்ததும் நாடு முழுவதும் எதிர்ப்பைக் கிளப்பியது!

# சுழல் நாயகன் அஸ்வின்




சர்வதேச கிரிக்கெட்டிலிருந்து அஷ்வின் விடைபெற்றிருக்கிறார். சொந்த அணியும் எதிரணியும் மைதானத்தில் அணிவகுத்து இருமருங்கிலும் நின்று மரியாதை செலுத்த, அஷ்வின் பெருமித நடைபோட்டிருக்க வேண்டும். கங்குலிக்கு தோனி கொடுத்ததைப் போல ஒரு செஷனுக்காவது இந்திய அணியைத் தலைமையேற்று நடத்தும் வாய்ப்பை அஷ்வினுக்கு ரோஹித் வழங்கியிருக்க வேண்டும். சக வீரர்கள் அஷ்வினை தோளில் தூக்கிச் சுமந்து மைதானத்தைச் சுற்றி பவனி வந்திருக்க வேண்டும். கூடியிருக்கும் ரசிகத் திரளுக்கு மத்தியில் அஷ்வின் தன்னுடைய விடைபெறல் உரையைக் கசிந்துருகிக் கண்ணீர் சிந்தி ஆற்றியிருக்க வேண்டும்.

இது எதுவுமே அஷ்வினுக்கு நடக்கவில்லை. விளையாடும் அணியில் இடமின்றி பெவிலியனில் இருக்கையில், பார்டர் கவாஸ்கர் தொடரின் இடையில் ஓய்வை அறிவித்திருக்கிறார். ஒரு ஜாம்பவானின் விடைபெறலுக்குத் தேவையான எந்த அலங்காரத்தையும் அஷ்வினுக்குச் சூட்டவில்லை. ஆனால், அவர் விட்டுச் சென்றிருப்பது இந்திய கிரிக்கெட்டில் என்றைக்கும் அழிக்க முடியாத தடங்கள்.

இந்திய அணியில் ஒரு முழு தசாப்தத்துக்கும் தவிர்க்க முடியாத வீரராக அஷ்வின் இருந்ததற்கு அவரின் திறமை மட்டுமே காரணம் இல்லை. அதைத்தாண்டி அவருக்குள் ஒரு நெஞ்சுரமும் மனத்திடமும் இருந்தது. அதுதான் அவருக்கான எரிசக்தி.

''அஷ்வினை ஒரு கட்டம் வரைக்கும் பேட்டராகப் பார்த்திருக்கிறேன். திடீரென ஒருநாள் பௌலராக வந்து நின்றார். ஆச்சர்யமாக இருந்தது'' என ரோஹித் சர்மா அஷ்வினின் விடைபெறல் பற்றிப் பேசுகையில் வியந்திருந்தார். உண்மையில் அஷ்வின் ஆரம்பத்தில் பேட்டராகத்தான் கிரிக்கெட் கரியரைத் தொடங்கியிருந்தார். ஒரு விபத்தால் வீட்டிலேயே முடங்கியிருக்க வேண்டிய சூழல். அதன்பின்தான் ஆஃப் ஸ்பின்னராக மாறுகிறார். அந்த விபத்தின் காயத்திலிருந்து மீண்டு வந்து அஷ்வின் கிரிக்கெட் ஆடுவார் என்ற நம்பிக்கை பலருக்குமே இல்லை. ஆனால்,






www.keelainews.in



அஷ்வின் மீண்டு வந்தார்.

விளையாட்டு வீரர்களுக்கு 'Visualization' திறன் ரொம்பவே முக்கியம். மனதுக்குள் போட்டிக்கான சூழலை கற்பனையாக ஓட்டிக்கொண்டே இருக்க வேண்டும். அது தன்னம்பிக்கையையும் தெம்பையும் கொடுக்கும். சிறுவயதில் காயம்பட்டு வீட்டில் இருந்த அந்தச் சமயத்தில்கூட முக்கியமான கிரிக்கெட் வீரர்களெல்லாம் அஷ்வினுக்கு பௌலிங் செய்வதைப் போலவும், இவர் அவர்களுக்கு பௌலிங் செய்வதைப் போலவும் கற்பனை செய்து விளையாடி வீட்டை ரெண்டாக்கிவிடுவாராம்.

அதேபோல, ஒரு முறை மும்பைக்கு 17 வயதுக்குட்பட்டோருக்கான அணித்தேர்வுக்குச் சென்றுவிட்டு அங்கே இந்தி தெரியாமல் படாத பாடு பட்டிருக்கிறார். சக வீரர்கள் சிலரால் கேலிக்கும் கிண்டலுக்கும்கூட ஆளாகியிருக்கிறார். இதனால், 'இனிமேல் நமக்கு கிரிக்கெட்டே வேண்டாம். இனிமேல் இப்படி மொழி தெரியாத இடத்திலெல்லாம் வந்து சிக்கிக்கொண்டு அல்லல்பட வேண்டாம்' என்றெல்லாம் நினைத்திருக்கிறார். ஆனால், சீக்கிரமே அந்த உளவியல் சோர்வான தருணத்திலிருந்துமே மீண்டு வந்தார்.



முடக்கிப் போடும் தறுவாய்களிலிருந்து மீண்டும் மீண்டும் எழுந்து வந்ததாலோ என்னவோ அஷ்வினுக்கு மனோபலம் ரொம்பவே அதிகம். 2007ல் சேப்பாக்கம் மைதானத்துக்கு ஒரு பயிற்சி முகாமுக்காக வெஸ்ட் இண்டீஸ் அணி வருகிறது. அவர்களுக்கு வலையில் பந்துவீச தமிழக பௌலர்கள் சிலர் நெட் பௌலர்களாக நியமிக்கப்படுகிறார்கள். அஷ்வினுக்கும் அந்த வாய்ப்பு கிடைக்கிறது.

டெஸ்ட் போட்டிகளில் அஷ்வின் நிகழ்த்தியிருப்பது இதுவரை சிலர் மட்டுமே செய்திருக்கும் சாதனை. ஒரு டெஸ்ட் போட்டியை போருக்கு இணையாக ஒப்பிடலாம். அஷ்வின் 106 டெஸ்ட் போட்டிகளில் ஆடி, 537 விக்கெட்டுகளை வீழ்த்தியிருக்கிறார். போரில் பல நூறு யானைகளை வீழ்த்தியதற்கு சமம் இது. அஷ்வின் ஒரு பௌலர் மட்டுமல்ல என்பதுதான் இங்கே கூடுதல் சிறப்பம்சம். இந்திய அணி இக்கட்டில் சிக்கிக் கொள்ளும்போதெல்லாம் அவருக்குள் புதைந்திருக்கும் மேற்கு மாம்பலத்தின் இளம் அஷ்வின் வந்துவிடுவார். கடந்த பார்டர் கவாஸ்கர் தொடரின் சிட்னி டெஸ்ட்டில் போட்டியை டிரா ஆக்க அஷ்வின் ஆடிய ஆட்டத்தை இந்திய ரசிகர்களால் எப்போதுமே மறக்க முடியாது. அஷ்வினுக்குக் கடுமையான முதுகு வலி. படுக்கையிலிருந்து எழவே முடியாத நிலை. அப்படியொரு கட்டத்தில் மருந்துகளை எடுத்துக்கொண்டு ஹனுமா விஹாரியுடன் இணைந்து மூன்று மணி நேரத்திற்கு ஆஸ்திரேலிய வீரர்களின் ஸ்லெட்ஜிங் ஊசிகளையும் தாங்கிக் கொண்டு போராடி பேட்டிங் ஆடி இந்திய அணியைக் காப்பாற்றியிருப்பார். மனதளவில் அயர்ச்சியாக உணரும் தருணங்களில் அந்த இன்னிங்ஸை கொஞ்சம் எடுத்துப் பாருங்கள். புதிய சக்தி கிடைத்ததைப் போல இருக்கும்.

அதேமாதிரி, கடந்த தசாப்தத்தில் அஷ்வினைப் போன்று 'சிஷீஸீஸ்வீநீமீவீஷீஸீ' கொண்ட வீரரையும் பார்த்திருக்க முடியாது. தனக்கென ஒரு நிலைப்பாட்டை வைத்துக் கொண்டு, தான் சரியென நம்பும் ஒரு விஷயத்துக்காக ஊரே எதிர்த்தாலும் ஒரு அடிகூட பின்வாங்கமாட்டார். 'நான்ஸ்ட்ரைக்கர் ரன் அவுட்'டை (முன்பு மங்கட் என்றும் கூறுவார்கள்.) அஷ்வின் செய்தபோதும், அதற்கு ஆதரவாக அவர் பேசியபோதும், ஒட்டுமொத்த கிரிக்கெட் உலகமே அவருக்கு எதிராக நின்றது. அஷ்வினின் கிரிக்கெட் அறத்தையே கேள்விக்கு உள்ளாக்கினர். அவரை கிரிக்கெட்டின் ஆன்மாவை குலைக்கும் வில்லனாகச் சித்திரித்தார்கள். எந்தத் தாக்குதலுக்கும் அவர் பின்வாங்கவில்லை. தன்னுடைய நிலைப்பாட்டில் உறுதியாக இருந்தார்.

அஷ்வின் பெரும் நம்பிக்கையாளர். அவருக்குத் தன் திறமையின் மீது நம்பிக்கையிருந்தது. மரியாதையுடன் கலந்து கிடைக்கும் வாய்ப்புகளின் மீது நம்பிக்கையிருந்தது. முக்கியமாக யாரையும் பிரமிப்பாகப் பார்த்து, தன்னைத் தாழ்த்திக்கொள்ள வேண்டிய அவசியமில்லை என்கிற கருத்தின் மீது கூடுதல் நம்பிக்கையிருந்தது. அந்த நம்பிக்கைகளின் வெற்றிதான் அஷ்வின்.



**விசிக துணைப் பொதுச்செயலாளராக இருந்த ஆதவ் அர்ஜுனா நேற்றைய தினம் அக்கட்சியில் இருந்து இடைநீக்கம் செய்யப்பட்ட நிலையில், அவர் விரைவில் தமிழக வெற்றிக் கழகத்தில் இணைய வாய்ப்புள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. விசிகவில் இணைந்தபோது எப்படி அக்கட்சியின் முக்கிய தூணாக மாறினாரோ, அதேபோல, புதிதாக துவங்கப்பட்டுள்ள தவெகவில் முக்கியப்பங்காற்றுவார் என்றும் தெரிகிறது. விசிகவில் நடப்பது என்ன... விரிவாக பார்க்கலாம்.**

# ஆதவ் கைக்கு செல்லும் தவெக ITWing?

## 2026 கேம் என்ன?

எல்லோருக்குமான தலைவர் அம்பேத்கர் புத்தக வெளியீட்டு விழாவில் தவெக தலைவர் விஜயோடு மேடை ஏறிய ஆதவ் அர்ஜுனா, பல்வேறு விஷயங்கள் குறித்து பேசினார். அம்பேத்கர் குறித்து பேசத்தொடங்கி, தமிழ்நாட்டில் 2026ம் ஆண்டு மன்னராட்சிக்கு முடிவு கட்ட வேண்டும் என்றும், பிறப்பால் ஒருவர் முதல்வர் ஆக்கப்படக்கூடாது என்றும் வெடித்துப் பேசினார் ஆதவ். அதே போல, விசிக தலைவர் திருமாவளவன் மேடையில் இல்லை எனினும், அவரது மனசாட்சி இங்குதான் இருக்கும் என்றும், மன்னராட்சி முறையை ஒழிக்க, 2026க்கான தேர்தல் வேலைகளை துவங்க வேண்டும் என்றும் அறிவித்தார் ஆதவ்.

வாய்ஸ் ஆஃப் காமன்ஸ் எனும் தேர்தல் வியூக நிறுவனத்தை நடத்தி வரும் ஆதவ், 2016 சட்டமன்ற தேர்தல், 2019 மக்களவைத் தேர்தல் மற்றும் 2021 சட்டமன்ற தேர்தல்களில் திமுகவுக்காக வேலை செய்திருக்கிறார். இதில், 2021 தேர்தலுக்காக வேலை செய்ய தேர்தல் வியூக வகுப்பாளர் பிரஷாந்த் கிஷோரை தமிழ்நாட்டுக்கு அழைத்து வந்தவரே ஆதவ் அர்ஜுனாதான். இப்படியாக தொடர்ந்த பயணம், திருமாவால் ஈர்க்கப்பட்டு, அக்கட்சியின் வெல்லும் சனநாயகம் மாநாடு, மது ஒழிப்பு மாநாடுகளை சிறப்பாக ஒருங்கிணைத்தார். கட்சியின் ஐடி விங்கை வலுப்படுத்தி இணைய அளவில் விசிகவுக்கு புது வடிவத்தை கொண்டுவந்தார் ஆதவ்.

இப்படி, ஆதவ்வின் செயல்







பாடுகளைப் பார்த்து, கட்சியில் இணைந்த அவருக்கு துணைப் பொதுச்செயலாளர் பொறுப்பை கொடுத்து அழகு பார்த்தார் திருமா. ஆக, விசிகவில் திருமாவுக்குப் பிறகு, இளைஞர்களால் ஈர்க்கப்படும் இளம் தலைவ ராகவே உருவெடுத்தார் ஆதவ் அர்ஜுனா. ஆட்சியி லும் பங்கு, அதிகாரத்திலும் பங்கு என்ற விசிகவின் கொள்கையை எடுத்துப் பேசியதில் துவங்கி, உதயநிதி துணை முதல்வராகும்போது, இத்தனை ஆண்டுகளாக போராடி வரும் திருமா முதல்வராகக் கூடாதா என்று கேள்வி எழுப்பியது வரை நீண்டது ஆதவ்வின் ஆதங்கம். அதே ஆதங்கத்தைத்தான் விஜய்யுடனான மேடையில் பேசினார் ஆதவ். அவரது பேச்சை கேட்டபிறகு, 2026 தேர்தலில் தவெகவும், விசிகவும் இணைந்து களம் காண இருக் கின்றனவா? என்ற கேள்வியும் எழத்தான் செய்தது.

இதனிடையே, திமுக கூட்டணியில் இருந்துகொண்டு, அதனை எதிர்த்து பேசியது சலசலப்பை ஏற்படுத்திய நிலையில், நேற்றைய தினம் கட்சியில் இருந்து இடைநீக்கம் செய்யப்பட்டார் ஆதவ். திருமாவின் இந்த முடிவு குறித்து அறிக்கைவிட்ட ஆதவ், 'ஒடுக்கப்பட்ட மக்களுக்கு அதிகாரம் கிடைத்துவிடக் கூடாது என்று நினைக்கும் மனநிலைதான் மன்னர் பரம்பரைக்கான மனநிலை' என்பதை அழுத்தமாகப் பதிவு செய்ய விரும்புகிறேன். ‘ஆட்சியிலும் பங்கு, அதிகாரத்திலும் பங்கு' என்ற முழக்கத்துடன் எளிய மக்கள் அதிகாரத்தை அடைவதற்கான பிரச்சாரத்தை மக்கள் சக்தியுடன் விரைவில் உருவாக்குவோம் என்று அதிரடி காட்டி வருகிறார்.

இந்நிலையில் விசிகவில் இருந்து இடைநீக்கம் செய்யப்பட்டுள்ள ஆதவ், அக்கட்சியில் இருந்து விலகி, தமிழக வெற்றிக் கழகத்தில் இணைய வாய்ப்பிருப்பதாக தகவல் வெளியாகி வருகின்றன. காரணம், விசிகவில் தலைவர் திருமாவுக்கு ஆதவ்வின் முக்கியத்துவம் தெரிந்தாலும், இரண்டாம் கட்ட தலைவர்கள் ஆதவ்வுடன் இசைந்துபோவதாக தெரியவில்லை. கட்சிக்கு ஆதவ் செய்த பணிகள் குறித்த விவாதத்தில், ஆதவ் மட்டுமே விசிகவை தூக்கிப்பிடித்துவிடவில்லை என்று காட்டமாக பேசினர்.

மறுபுறம், பிப்ரவரியில் நடிகர் விஜய்யால் துவங்கப்பட்ட தமிழக வெற்றிக் கழகம், 2026 தேர்தல் வெற்றியை இலக்காக நிர்ணயித்து பயணம் செய்து வருகிறது. முதல் மாநாடு, செயற்குழு கூட்டத்தில் தீர்மானங்கள் என்று தொடங்கி, 2 தொகுதிக்கு ஒரு மாவட்டச் செயலாளரை நியமிப்பது என்று வேகமெடுத்து வருகிறது தவெகவின் பயணம்.

இந்த நிலையில்தான், தேர்தல் வியூக நிறுவனமான வாய்ஸ் ஆஃப் காமன்ஸைக் கொண்டு, தவெகவுக்கு வியூகம் வகுக்க திட்டமிடுகிறாராம் ஆதவ். அதோடு, அக்கட்சியின் ஐடி விங்கை வலிமையாக கட்டமைத்து தேர்தல் பணிகளில் தீவிரம் காட்டவும் திட்டமிட்டிருப்பதாக தெரிகிறது. அவரே சொன்னதுபோல, 2016, 2019 மற்றும் 2021ம் ஆண்டு என்று மூன்று தேர்தல் யுத்தங்களில் திமுகவுக்காக களமாடியவர், 2026 தேர்தலில் விஜய்யோடு நின்று அவருக்கு வலிமை சேர்த்து, தவெகவின் வெற்றிக்கு பாடுபட திட்டமிட்டிருப்பதாக தகவல்கள் வெளியாகியுள்ளது.

எப்படிப் பார்த்தாலும், 2026ம் ஆண்டு நடக்க இருக்கும் சட்டமன்ற தேர்தல் பரபரப்புக்கு கொஞ் சமும் பஞ்சமில்லாமல் இருக்கும் என்பதை மட்டும் உணர முடிகிறது என்கின்றனர் அரசியல் வல்லுநர்கள்.



# போன் மூலம் பணம் பறிக்கும் முகமூடித் திருடர்கள்!

## எப்படி தப்பிப்பது..?

மோசடி செய்யும் டெலி மார்க்கெட்டிங் நிறுவனங்கள் அதிக அளவிலான கனெக்ஷன்களைப் பெற்றிருக்கும். இவற்றை மொத்தமாக இரண்டு வருடங்களுக்குத் துண்டிக்கும்படி தொலைத்தொடர்பு ஒழுங்குமுறை ஆணையம் கூறியுள்ளது... தொலைத்தொடர்புத் துறை அமைச்சர் சிந்தியா, சமீபத்தில் ஏர்டெல், ஐடியா, ஜியோ ஆகியவற்றின் தலைவர்களை சந்தித்துப் பேசினார். அப்போது நிறுவனங்கள் தங்கள் குறைகளைச் சொல்ல முற்பட... அமைச்சரோ, “முதலில் உங்கள் சேவைக் குறைபாடுகளை நீக்கும் வழியைப் பாருங்கள்; மக்களுக்குத் தொந்தரவு விளைவிக்கும் ஸ்கேம் அழைப்புகள், குறுஞ்செய்திகள் போன்றவற்றைக் கட்டுப் படுத்துங்கள்” என்று அறிவுறுத்தியுள்ளது வரவேற்கத்தக்கது.

### கடுமை ஏன்..?

இவ்வளவு கடுமையாக அமைச்சர் பேசியதில் ஆச்சர்யம் இல்லை. இதுவரை சிரியா, மியான்மர் போன்ற நாடுகளில் இருந்து தான் டெலிமார்க்கெட்டிங் மோசடி நிறுவனங் கள் இயங்கி வந்தன. இவற்றின் விஷக்கரங்கள் நாடு தாண்டி உலகெங்கும் வியாபிக்கின்றன என்பதால், இவை குறித்த புகார்கள் சர்வதேச அளவில் எழுப்பப்பட்டு வருகின்றன.

இப்போது இந்தியாவிலும், குறிப்பாக கொல்கத்தாவை மையமாகக் கொண்டு, இந்த மோசடி நிறுவனங்கள் இயங்குவது கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. இது உலக அரங்கில் நம் நாட்டின் நற்பெயருக்குக் களங்கம் விளைவித்து, தொலைத்தொடர்புத் துறைக்கும் சங்கடம் ஏற்படுத்தி இருக்கிறது.

### கடும் நடவடிக்கைகள்...

பொதுவாக, மோசடி செய்யும் டெலி மார்க்கெட்டிங் நிறுவனங்கள் அதிக அளவிலான கனெக் ஷன்களைப் பெற்றிருக்கும். இவற்றைக் கண்டறிந்து அந்த கனெக் ஷன்கள் அத்தனையையும் மொத்தமாக இரண்டு வருடங்களுக்குத் துண்டிக்கும்படி தொலைத்தொடர்பு ஒழுங்குமுறை ஆணையம் கூறியுள்ளது.

ஒரு டெலிகாம் நிறுவனம் ஒரு மோசடியான டெலிமார்க்கெட்டிங் நிறுவனத்தைக் கண்டறிந்து கனெக்ஷனைத் துண்டித்தாலும், அது மற்ற டெலிகாம் நிறுவனங்களில் கனெக்ஷன் பெற்று தன் ஏமாற்று வேலையைத் தொடங்கிவிடுகிறது. ஆகவே, மற்ற டெலிகாம் நிறுவனங்களுக்கும் இந்த மோசடி நிறுவனங்கள் பற்றிய தகவல்களை 24 மணி நேரத்துக்குள் அளித்து, அங்கும் இந்த நிறுவனங்கள் தங்கள் கைவரிசையைக் காட்டாதபடிக்கு கவனமாக இருக்கும்படி

கூறியுள்ளது.

அத்துடன், அங்கீகரிக்கப்படாத யு.ஆர்.எல். களை (URL) உள்ளடக்கிய குறுஞ்செய்திகளைப் பகிர்வதைத் தடுக்கும்படியும், அவற்றை உருவாக்கி அனுப்பும் நிறுவனங்களைக் கண்டறியும் விதத்தில் நடவடிக்கைகளை எடுக்கும்படியும் ட்ராய் (TRAI) ஆணை பிறப்பித்துள்ளது. ட்ராயின் இந்தக் கெடுபிடிகள் ஓரளவு பலனும் அளிக்கத் தொடங்கியுள்ளன.

**உள்நாட்டு நிலவரம்...**

இப்படிப்பட்ட ஸ்கேம் அழைப்புகளும், குறுஞ் செய்திகளும் நாம் தினம்தோறும் சந்திக்கும் தொல்லைகள்தான். ஒரு நாளுக்கு குறைந்தபட்சம் இரண்டு அழைப்புகள் வருகின்றன. போலீஸ் டிபார்ட்மென்ட், சி.பி.ஐ, வருமான வரித் துறை, உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு தபால் துறை போன்ற துறைகளைச் சார்ந்தவர்கள் என்று கூறிக் கொண்டு, நாம் அல்லது நம்மைச் சார்ந்தவர்கள் ஏதோ பெரிய தவறிழைத்து விட்டதாகவும் உடனே அதைச் சரிசெய்ய வாய்ப்பு தருவதாகவும் கூறி, ஓர் எண்ணை அழுத்தச் சொல்கிறார்கள்.

அல்லது தொலைத்தொடர்புத் துறை என்று கூறிக்கொண்டு, உடனே அவர்கள் தரும் எண்ணை அழுத்தாவிட்டால் நம் தொலை பேசியின் இயக்கம் துண்டிக்கப்படும் என்று பயமுறுத்துகிறார்கள். இவர்கள் டிஜிட்டல் கருவிகள் மற்றும் இன்டர் ஆக்டிவ் வாய்ஸ் ரெஸ்பான்ஸ் போன்ற நவீனக் கருவிகளைப் பயன்படுத்துவதால், அது ஏதோ உண்மை யாகவே அரசுத் துறைகளிடம் இருந்து வரும் ஆட்டோமேட்டட் செய்தி போன்ற தோற்றத்தை உருவாக்குகிறது.

**வாட்ஸ்அப், ஸ்கைப், டெலிகிராம்...**

இப்படியான மோசடி அழைப்புகள் மொபைல் போனில் மட்டுமன்றி, வாட்ஸ் அப், டெலிகிராம் போன்ற வற்றின் மூலமும் வருகின்றன. மும்பையைச் சேர்ந்த ஒரு பெண்மணிக்கு வாட்ஸ் அப்பில் ஒரு போலீஸ் அதிகாரியிடம் இருந்து அழைப்பு வந்தது. சில நபர்கள் ஒரு பாலியல் வன்கொடுமை வழக்கில் கைதாகி உள்ளதா கவும், அதில் பாதிப்படைந்த பெண் இந்தப் பெண்மணியின் மகளாக இருக்கலாம் என்றும் கூறிய அந்த 'போலீஸ் அதிகாரி' இவரின் மகள் குறித்து மேலும் தகவல்களைக் கேட்டுள்ளார். அந்த அழைப்பை சந்தேகித்த பெண்மணி அழைப்பைத் துண்டித்துள்ளார். உடனே இன்னொரு 'போலீஸ் அதிகாரி' அழைத்து பயமுறுத்தும் வகையில் இந்தியில் பேசியுள்ளார். இது போன்ற அழைப்புகள் ஒரு தாய்க்கு எத்தனை பயத்தை உருவாக்கும்?

**நாம் எப்படி கவனமாக இருக்கலாம்..?**

அமைச்சரின் கெடுபிடியும், டெலிகாம் நிறுவனங்களின் நடவடிக்கையும், போலீஸின் ஆதரவும் ஒரு புறம் தொடர்ந்தாலும், குடிமக்களாகிய நாமும் சில நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும்.

- நம் வீட்டில் உள்ள வயதானவர்களுக்கும், நண்பர்களுக்கும் மோசடிகள் குறித்து விளக்க வேண்டும். அவர்களுக்குப் பரிச்சயம் இல்லாத எண்களில் இருந்து வரும் அழைப்புகள், குறுஞ் செய்திகளைத் தவிர்க்கும்படி அறிவுறுத்த வேண்டும்.
- சந்தேகமான அழைப்புகள், குறுஞ்செய்திகள் குறித்து புகார் செய்யதொலைத்தொடர்புத் துறையால் நடத்தப்படும் சன்ச்சார் சாத்தி என்ற வெப்சைட்டைப் பயன்படுத்தலாம். அதன் லிங்க் https://sancharsaathi.gov.in/ என்பதாகும்.
- எந்தத் துறையில் இருந்து ஃபோன் செய் வதாகக் கூறுகிறார்களோ, அந்தத் துறையின் வெப்சைட்டில் இருந்து ஃபோன் நம்பரைப் பெற்று, நேரடியாகத் தொடர்புகொண்டு விசாரிக்கலாம்.
- பேடிஎம், ஜீபே போன்ற ஆன்லைன் பேமென்ட்



முறைகளில் பணம் கேட்கிறார்கள் என்றாலே அது ஒரு மோசடி அழைப்பாக இருக்கலாம் என்று புரிந்துகொள்ள வேண்டும்.
- பொதுவாக, மோசடிக்காரர்கள் வேக மாகச் செயல்படும்படி அழுத்தம் கொடுப்பார் கள். அவர்கள் கூறுவதை உடனடியாகச் செய்யாமல், நிதானமாகச் செயல்பட வேண்டும்.
- உண்மையான போலீஸ் அதிகாரிகள் நம்மிடம் விசாரித்தால் உடனே அதை எழுத்தில் வடித்து நம் கையொப்பத்தைப் பெற வேண்டும். ஆகவே, நம்மை நேரில் அழைப்பார் களே தவிர, போனிலோ, வாட்ஸ்அப்பிலோ, தொடர்புகொள்ள மாட்டார்கள் என்பதை நினைவில் கொள்வது நல்லது.
- சமூக வலைதளங்களில் போஸ்ட் செய்யப் படும் புகைப்படங்களும், தனிநபர் தகவல் களும்கூட மோசடிக்காரர்களுக்கு வசதியாகி விடுகிறது என்பதால் அவற்றைப் பொறுப்புடன் கையாள வேண்டும். நாம் கவனமுடன் இருப்பதுடன், இது போன்ற சைபர் குற்றங்களைக் கூடியவரை வெறுமனே கடந்துபோகாமல், அரசின் கவனத்துக்குக் கொண்டு செல்வதும் நம் கடமை.

# தண்ணீர்

## சில உண்மைகள்...

**நீர் ஒரு அத்தியாவசிய ஊட்டச்சத்து மற்றும் மனித உடலில் முக்கிய பங்கு வகிக்கிறது. நாம் உணவு இல்லாமல் பல வாரங்கள் வரை வாழ முடியும், ஆனால் தண்ணீர் இல்லாமல் சில நாட்கள் மட்டுமே வாழ முடியும் உடலில் உள்ள ஒவ்வொரு அமைப்பும், செல்கள் மற்றும் திசுக்கள், முக்கிய உறுப்புகள் செயல்பட தண்ணீர் தேவைப்படுகிறது.**



தண்ணீர் நம் உடலில் உள்ள அனைத்து செல்களுக்கும் ஊட்டச்சத்துக்களையும், மூளைக்கு ஆக்ஸிஜனையும் கொண்டு செல்கிறது. தாதுக்கள், வைட்டமின்கள், அமினோ அமிலங்கள், குளுக்கோஸ் மற்றும் பிற பொருட்களை உறிஞ்சி உறிஞ்சுவதற்கு தண்ணீர் உடலை அனுமதிக்கிறது.நீர் நச்சுகள் மற்றும் கழிவுகளை வெளியேற்றுகிறது. உடல் வெப்பநிலையை சீராக்க தண்ணீர் உதவுகிறது. நீர் மூட்டுகள் மற்றும் தசைகளுக்கு மசகு எண்ணெய் போல செயல்படுகிறது 2010 ஆம் ஆண்டில், ஐரோப்பிய உணவுப் பாதுகாப்பு ஆணையம் (EFSA) தண்ணீருக்கான உணவுக் குறிப்பு மதிப்புகள் குறித்த அதன் அறிவியல் கருத்தை வெளியிட்டது.

இது ஆண்களும் பெண்களும் அவர்களின் வயதைப் பொறுத்து ஒரு நாளைக்கு எவ்வளவு தண்ணீர் குடிக்க வேண்டும் என்பது குறித்த தெளிவான பரிந்துரைகளை வழங்குகிறது. இந்த கருத்து, தினசரி தண்ணீர் உட்கொள்ளும் தேசிய வழிகாட்டுதல்களை வெளியிடுவதற்கும் வழி வகுத்துள்ளது.

குடிநீரின் ஆரோக்கிய நன்மைகள் நன்கு ஆவணப்படுத்தப் பட்டுள்ளன மற்றும் ஐரோப்பிய உணவு பாதுகாப்பு ஆணையத்தால் 2011 இல் அங்கீகரிக்கப்பட்டது, அது தண்ணீர் தொடர்பான சுகாதார உரிமை கோரல்களில் அதன் அறிவியல் கருத்தை வெளியிட்டது. பரிந்துரைக்கப்பட்ட அளவை உட்கொள்ளும் போது, சாதாரண உடல் செயல்பாடுகளை பராமரிப்பதற்கும், சாதாரண அறிவாற்றல் செயல்பாடுகளை பராமரிப்பதற்கும் தண்ணீர் பங்களிக்கிறது என்பதை EFSA உறுதிப்படுத்தியது. மேலும், உடலின் இயல்பான தெர்மோர்குலேஷன் பராமரிக்க தண்ணீர் பங்களிக்கிறது.

ஒரு வயது வந்தவரின் உடல் எடையில் சராசரியாக 60% [illegible] 31% முதல் நுரையீரலில் 83% வரை உள்ளது.

மனித உடலால் தண்ணீரைச் சேமிக்க முடியாது. சுவாசம், வியர்வை சிறுநீர் மற்றும் மலம் வெளியேறுவதன் மூலம் ஒவ்வொரு நாளும் நாம் தொடர்ந்து தண்ணீரை இழக்கிறோம். இழந்த திரவங்கள் சரியான நேரத்தில் நிரப்பப்படுவதையும், நமது உடல்கள் சரியாக நீரேற்றமாக இருப்பதையும் உறுதி செய்வது நல்ல ஆரோக்கியத்திற்கும் உடல் செயல்படுவதற்கும் அவசியம்.

### *சமீபத்தில் அதிகரிக்கும் தண்ணீர் தட்டுப்பாடு*

போதிய நீர் வளம் உள்ள நாடுகளில் கூட, தண்ணீர் தட்டுப்பாடு என்பது சாதாரணமானதல்ல. இது பல காரணிகளால் இருக்கலாம் சரிந்த உள்கட்டமைப்பு மற்றும் விநியோக அமைப்புகள், மாசுபாடு, மோதல்கள் அல்லது நீர் ஆதாரங்களின் மோசமான மேலாண்மை காலநிலை மாற்றம்



www.keelainews.in





மற்றும் மனித காரணிகள் ஆகியவை குழந்தைகளின் பாதுகாப்பான தண்ணீருக்கான உரிமையை பெரிய முறையில் மறுக்கின்றன என்பது தெளிவாகிறது. தண்ணீர் பற்றாக்குறையானது குடிப்பதற்கும், அடிப்படை சுகாதாரத்தை கடைப்பிடிப்பதற்கும், வீடுகளிலும், பள்ளிகளிலும், சுகாதாரப் பாதுகாப்பு வசதிகளிலும் பாதுகாப்பான தண்ணீரைப் பெறுவதைக் கட்டுப்படுத்துகிறது.

தண்ணீர் பற்றாக்குறையாக இருக்கும்போது, கழிவுநீர் அமைப்புகள் செயலிழந்து, காலரா போன்ற நோய்கள் பரவும் அபாயம் உள்ளது. தண்ணீர் பற்றாக்குறை பெண்கள் மற்றும் குழந்தைகளை அதிக அளவில் பாதிக்கிறது, ஏனெனில் அவர்கள் பெரும்பாலும் அதை சேகரிக்கும் பொறுப்பு. தண்ணீர் இன்னும் தொலைவில் இருக்கும்போது, அதை சேகரிக்க அதிக நேரம் தேவைப்படுகிறது, இது பெரும்பாலும் பள்ளியில் குறைந்த நேரத்தைக் குறிக்கிறது. குறிப்பாக பெண் குழந்தைகளுக்கு, பள்ளிகளில் தண்ணீர் பற்றாக்குறையால் மாணவர் சேர்க்கை, வருகை மற்றும் செயல்திறன் பாதிக்கப்படுகிறது.

நீண்ட தூரத்திற்கு தண்ணீரை எடுத்துச் செல்வது மிகப்பெரிய உடல் சுமையாகும், மேலும் குழந்தைகளை பாதுகாப்பு அபாயங்கள் மற்றும் சுரண்டலுக்கு ஆளாக்கும்.

### *நீர் தரம் அச்சுறுத்தல்கள்*

நீரின் தரம் என்பது மாசு, வானிலை, அலைகள், மனித நடவடிக்கைகள் மற்றும் பல காரணிகளால் பாதிக்கப்படும் ஒரு சிக்கலான பிரச்சினையாகும். விசைகளில், நீரின் தரத்திற்கான அச்சுறுத்தல்கள் உள்ளூர், பிராந்திய அல்லது உலகளாவிய இயல்பு என வகைப்படுத்தப்படுகின்றன. உள்ளூர் அச்சுறுத்தல்கள் புயல் நீர், கழிவு நீர், கரிம குப்பைகள், வண்டல் மற்றும் தீங்கு விளைவிக்கும் கப்பல் வெளியேற்றம் போன்ற பிரச்சினைகள். பிராந்திய அச்சுறுத்தல்கள் மெக்ஸிகோ வளைகுடா மற்றும் தெற்கு புளோரிடா போன்ற விசைகளுக்கு வெளியில் இருந்து வரும் நீரின் தரக் கோளாறுகளுடன் தொடர்புடையவை. புளோரிடா விசைகள் இந்த பகுதிகளுடன் நீரோட்டங்கள் மற்றும் அலைகளால் இணைக்கப்பட்டுள்ளன, அவை மாசுபட்ட நீரை சரணாலயத்திற்குள் கொண்டு செல்ல முடியும். உலகளவில், அதிகரித்து வரும் வெப்பநிலை மற்றும் கடல் அமிலமயமாக்கல் நமது நீரைப் பாதிக்கிறது, அதே சமயம் கடல் மட்ட உயர்வு மற்றும் புயல் மற்றும் மழைப்பொழிவு முறைகளை மாற்றுவது பல்வேறு நிலம் சார்ந்த மாசுபாடுகளை அருகில் உள்ள நீரில் பாய்ச்சுவதை அதிகரிக்கலாம்.



### *இந்திய அரசின் ஜல் ஜீவன் மிஷன்*

நவம்பர் 21, 2023 நிலவரப்படி, இந்தியாவில் 70.76% கிராமப்புறங்களில் செயல்பாட்டு வீட்டுக் குழாய் இணைப்புகள் இருப்பதாக ஜல் ஜீவன் மிஷன் தெரிவித்துள்ளது.

### *சுத்தமான தண்ணீர் ஏன்?*

வீட்டு மட்டத்தில் சுத்தமான குடிநீருக்கான பாதுகாப்பான மற்றும் உறுதியான அணுகலை உறுதி செய்வது குறிப்பிட்ட பகுதிகளில் இன்னும் செயலில் உள்ளது. கூடுதலாக, கழுவுதல், சமைத்தல் மற்றும் உணவு உற்பத்தி போன்ற அத்தியாவசியப் பணிகளுக்கு போதிய தண்ணீர் இல்லாததால் உடல்நலப் பிரச்சினைகள், கல்வி மற்றும் வாழ்வாதாரம் பாதிக்கப்படுகிறது. நிலத்தடி நீர் மட்டத்தை குறைப்பது நிலையான நீர் ஆதாரங்களின் தேவையை தீவிரப்படுத்துகிறது இது நமது கவனத்தின் மையப் பிரச்சினையாகும். நீர் பாதுகாப்பு என்பது உணவு மற்றும் பொருட்கள் உற்பத்தி, சுகாதாரம் மற்றும் சுகாதாரம் ஆகியவற்றில் தரத்தை பராமரிக்க போதுமான சுத்தமான தண்ணீரைக் கொண்டுள்ளது.

**வாட்டர் எய்ட் இந்தியா நிலையான தீர்வுகளை செயல்படுத்த அர்ப்பணிப்புடன் உள்ளது, நாட்டில் எல்லா இடங்களிலும் சுத்தமான தண்ணீரை அனைவருக்கும் அணுகுவதற்கு முயற்சிக்கிறது.**

# மக்களுக்கு வரி, மன்னர்களுக்கு சலுகை!




## என்னங்க உங்க ஜி.எஸ்.டி சட்டம்?!

**சிகரெட், புகையிலை, குளிர்பானங்கள் போன்றவற்றுக்கு `பாவ வரி' (Sin Tax) 35% விதிப்பதுடன், மக்களின் ஆடம்பரச் செலவுகளுக்கான வரியை அதிகப்படுத்தவும் பரிந்துரைக்கப்பட்டிருக்கிறது.**

'ஒரே நாடு ஒரே வரி' என்ற முழக்கத்துடன், மத்திய பா.ஜ.க அரசு 2017ம் ஆண்டு ஜி.எஸ்.டியை (Goods & Services Tax) அமல்படுத்தியபோது, 'இது, வரிகளை எளிமையாக்கும் செயல்பாடு' என்று விளக்கம் கொடுத்தது. இன்றோ, ஒரு ஹோட்டலிலுள்ள பல்வேறு உணவு வகைகளில் ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு வரி விகிதம், ஒரு ஜவுளிக்கடையிலுள்ள ஆடை ரகங்களில் ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு வரி விகிதம் என பில்லிங் கம்ப்யூட்டரே தலைசுற்றிப்போகும் அளவுக்குச் சிக்கலாகி நிற்கிறது. எரிகிற தீயில் எண்ணெய் ஊற்றுவது போல் இதுவரை இருக்கும் 5%, 12%, 18%, 28% என்ற வரி ஸ்லாப்புகளுடன் (Tax Slabs) புதிதாக 35% என்னும் ஒரு ஸ்லாப் சேர்க்கப்படலாம் என்று, 28 அமைச்சர்கள் கொண்ட குழு பரிந்துரை செய்வதாகவும், இதை அமல் செய்தால் 148 பொருள்களின் வரி விகிதம் மாறலாம் என்றும் தகவல் வெளியாகியிருக்கிறது. இதற்கு எதிர்ப்பு, ஆதரவு, விமர்சனம், விளக்கம், கேள்விகள் எனச் சுழல்கின்றன. அனைத்தையும் விரிவாகப் பார்ப்போம் இங்கே....





### நடுத்தர மக்கள்... ஸ்லாப் மாற்றங்கள்!

`ஜி.எஸ்.டியை அமல்படுத்திய பிறகு சர்வீஸ் டாக்ஸ், வாட் (VAT) எனப்படும் மதிப்புக் கூட்டப்பட்ட வரி, சென்ட்ரல் எக்சைஸ் வரி போன்ற பல வரிகள் நீக்கப்பட்டன. இதனால், வரி விதிப்பு எளிதில் புரியும்படியும், வரி வசூலிப்பு எளிமையாகவும் ஆக்கப்பட்டிருக்கிறது' என்றனர் பொருளாதார வல்லுநர்கள் சிலர். ஆனால், ஜி.எஸ்.டி விகிதம் அடிக்கடி மாற்றி அமைக்கப்படுவது, அதற்குப் பல்வேறு காரணங்கள் கூறப்படுவது, எல்லாவற்றுக்கும் மேலாக அவை பாக்கெட்டைப் பதம் பார்ப்பது... மக்களை அதிர்ச்சியிலும் குழப்பத்திலும் ஆழ்த்துகிறது.

இப்போது பரிந்துரைக்கப்பட்டிருக்கும் வரி ஸ்லாப்களில், நடுத்தர மக்களுக்கு உதவக்கூடிய சிலவற்றை முதலில் பார்க்கலாம். 10,000 ரூபாய்க்குக் குறைவான விலையுள்ள சைக்கிள்கள், பள்ளி மாண வர்களுக்கான நோட்டுப் புத்தகங்கள் ஆகியவற்றின் மீதான 12% ஜி.எஸ்.டி வரியை, 5%ஆகக் குறைக்க பரிந்துரைக்கப்பட்டிருக்கிறது. டேர்ம், ஹெல்த் இன்ஷூரன்ஸ் ஆகியவற்றின் பிரீமியத்தின் மீதான ஜி.எஸ்.டி., 20 லிட்டர் குடிநீர் பேக் மீதான ஜி.எஸ்.டி 18%லிருந்து 5% என குறைக்கப் பரிந்துரைக்கப் பட்டிருக்கிறது.

### 35% பாவ வரி...!

சிகரெட், புகையிலை, குளிர்பானங்கள் போன்றவற்றுக்கு `பாவ வரி' (Sin Tax) 35% விதிப்பதுடன், மக்களின் ஆடம்பரச் செலவுகளுக்கான வரியை அதிகப்படுத்தவும்

சம்பாதிக்கும் காலத்தில் வரி கட்டி நாட்டுக்கு வளம் சேர்த்தவர்களுக்கு மரியாதை செய்யும்விதமாக, வயதான காலத்தில் அவர்களுக்குப் போதுமான அளவு பென்ஷன் மேலை நாடுகளில் வழங்கப்படுகிறது. நம் நாட்டிலோ, நமது பென்ஷனுக்குத் தேவையான பணத்தை நாமே சேர்ப்பது மட்டுமல்ல; அதிலிருந்து வரக்கூடிய வருமானத்துக்கும் வரி கட்ட வேண்டிய நிலை இருக்கிறது. `அதிக வருமானமுள்ளவர்கள் அதிக வரி கட்ட வேண்டும்



பரிந்துரைக்கப்பட்டிருக்கிறது. இதற்காகவே இதுவரை இருந்த ஸ்லாப்புகள் தவிர, புதிதாக 35% ஸ்லாப் அறிமுகம் செய்யப்படவிருக்கிறது. உதாரணமாக, ரெடிமேட் ஆடைகளுக்கு இதுவரை 5% முதல் 12% வரை ஜி.எஸ்.டி இருந்தது. இனி 10 ஆயிரம் ரூபாய்க்கு மேல் விலையுள்ள ஆடைகள், 15 ஆயிரம் ரூபாய்க்கு மேல் விலையுள்ள ஆடம்பரக் காலணிகள், 25 ஆயிரம் ரூபாய்க்கு மேல் விலையுள்ள கைக்கடிகாரங்கள் போன்றவற்றுக்கான வரி 28%ஆக உயர்த்தப்படலாம். இவை நாட்டின் வருவாயை அதிகப்படுத்தி, பொருளாதார முன்னேற்றத்துக்கு உதவும் என்று அமைச்சர்கள் குழு கருதுகிறது.

### தனிநபர் வருமானம் குறைவு... 35% தேவையா?!

இந்த ஸ்லாப் மாற்றங்கள் குறித்த ஆதரவு தரப்பு, “95% 98% இந்தியர்கள் ஆடம்பரப் பொருள்களை வாங்கும் நிலையில் இல்லை. அவர்கள் வாங்கும் 1,500 ரூபாய் வரை விலையுள்ள சாதாரண ஆடைகளுக்கு 5% வரிதான் விதிக்கப்படுகிறது. ஒருவரால் ஒரு கைக்கடிகாரத்துக்கு 25,000 ரூபாய் செலவழிக்க முடியும் என்றால் அதிக வரி கட்டவும் அவர் தயாராக இருக்க வேண்டும். மேலும், `பாவ வரி' என்பது மக்களை நல்வழிப்படுத்தவே அதிகப்படுத்தப்படுகிறது. ஆஸ்திரேலியா, ஐரோப்பா, அமெரிக்கா போன்ற நாடுகளில் 42% 45% வரை வருமான வரி விதிக்கப்படுகிறது. நம் நாட்டில் அந்த அளவு வரி இல்லை என்பதைக் கருத்தில்கொள்ள வேண்டும்” என்கிறார்கள்.

எதிர்த் தரப்போ, “மக்களை மிரட்டிப் பறிக்கப்படும் டெரர் டாக்ஸாக (Terror Tax) ஜி.எஸ்.டி மாறிவிட்டது. இதனால்தான் உலகில் வேறு எங்கும் இல்லாத அளவுக்கு நம் நாட்டு மக்கள் வேறு நாடுகளுக்குக் குடிபெயர்கின்றனர். மக்கள் நலன்தான் முக்கியம் என்றால் புகையிலை, மதுபானம் போன்றவற்றை முழுவதுமாகத் தடை செய்யுங்கள். மக்கள் நலனுக்காக அதிக வரி என்பது தவறு. வளர்ந்த நாடுகளில் இருப்பது போல் மிக அதிக தனிநபர் வருமானம் இந்தியாவில் இல்லை. அதிக வரி விதிப்பு மட்டுமே இருக்கிறது” என்கிறார்கள்.

“புகையிலை, சிகரெட் போன்றவற்றுக்கு `பாவ வரி' விதிக்கலாம்; சூதாட்டத்துக்கு வரியை அதிகப்படுத்தலாம். ஆனால், அப்படி அரசாங்கத்துக்கு வரும் பணம், எந்தெந்த மக்கள் நலத் திட்டங்களில் பயன்படுத்தப்படுகிறது என்பதை



**2022ல் ரிலையன்ஸ் உள்ளிட்ட எண்ணெய் நிறுவனங்களுக்கு விதிக்கப்பட்ட விண்ட்ஃபால் டாக்ஸை சமீபத்தில் வாபஸ் பெற்றது மத்திய அரசு. இன்னொரு பக்கம், பொதுமக்கள் தலையில் வரியை இறக்குகிறது.மக்களுக்கு மேலும் மேலும் வரி விதிப்பு, தொழிலதிபர்கள், அரசியல்வாதிகளுக்கு வரிவிலக்கு, குறைப்பு என்ற இந்த முரணை முதலில் நேர்செய்ய வேண்டும்.**




அறிந்துகொள்ளும் வகையிலான வெளிப்படைத்தன்மை வேண்டும். இத்தனை சதவிகித வரியை அள்ளிக்கொடுத்த பிறகும், மோசமான சாலைகளில் முதுகு ஒடிய பிரயாணிப்பது வேதனை அளிக்கிறது'' என்பது இந்திய மக்களின் ஒட்டுமொத்தக் குமுறலாக இருக்கிறது.

### தொழிலதிபர்களுக்கு வரிவிலக்கு?

சம்பாதிக்கும் காலத்தில் வரி கட்டி நாட்டுக்கு வளம் சேர்த்தவர்களுக்கு மரியாதை செய்யும் விதமாக, வயதான காலத்தில் அவர்களுக்குப் போதுமான அளவு பென்ஷன் மேலை நாடுகளில் வழங்கப்படுகிறது. நம் நாட்டிலோ, நமது பென்ஷனுக்குத் தேவையான பணத்தை நாமே சேர்ப்பது மட்டுமல்ல; அதிலிருந்து வரக்கூடிய வருமானத்துக்கும் வரி கட்ட வேண்டிய நிலை இருக்கிறது. `அதிக வருமானமுள்ளவர்கள் அதிக வரி கட்ட வேண்டும்' என்னும் விதி எல்லோருக்கும் பொருந்த வேண்டும். ஆனால், அதிக வருமானம் பெறும் நடிகர்களும், விளையாட்டு வீரர்களும், அமைச்சர்களும், அரசியல்வாதிகளும் கட்டும் வரி விகிதம் சில காரணங்களுக்காகக் குறைக்கப்படுகிறது.

உதாரணமாக, தெலங்கானா, மத்தியப் பிரதேசம், சத்தீஸ்கர், ஹரியானா, உத்தரகாண்ட், ஹிமாச்சலப் பிரதேசம் போன்ற மாநிலங்களில் முதல் மந்திரி, இணை, துணை மந்திரிகள், சபாநாயகர்கள், துணை சபாநாயகர்கள், அரசு ஆலோசகர்கள் போன்றோருக்கு லட்சக்கணக்கில் சம்பளம் தரப்படுகிறது. வரியையும் மாநில அரசுகளே கட்டுகின்றன என்பது கொடுமை. மற்ற சில மாநிலங்களோ, இந்தத் தலைவலியைத் தவிர்க்க, அமைச்சர்களுக்கு வரி விதிப்பு செய்வதேயில்லை. எல்லா மாநிலங்களிலும், அரசு உபயத்தில் அரசியல்வாதிகளும் அதிகாரிகளும் செய்யும் மாளிகை வாசம், சொகுசு கார், விமானப் பயணங்கள் போன்றவற்றுக்கும் `மன்னர்' காலம்போல மக்கள் வரிப்பணம்தான் அள்ளித்தரப்படுகிறது.

2019ல் பெரு நிறுவனங்களுக்கு உதவும் விதத்தில் அறிமுகப்படுத்தப்பட்ட சலுகை வரியால் (Concessional Tax Regime) அவற்றுக்கான வரி விகிதம் குறைக்கப்பட்டதில் கடந்த நான்கு வருடங்களில் ரூ.3 லட்சம் கோடி வருமானத்தை அரசு இழந்திருக்கிறது.

2022ல் ரிலையன்ஸ் உள்ளிட்ட எண்ணெய் நிறுவனங்களுக்கு விதிக்கப்பட்ட விண்ட்ஃபால் டாக்ஸை சமீபத்தில் வாபஸ் பெற்றது மத்திய அரசு. இன்னொரு பக்கம், பொதுமக்கள் தலையில் வரியை இறக்குகிறது.மக்களுக்கு மேலும் மேலும் வரி விதிப்பு, தொழிலதிபர்கள், அரசியல்வாதிகளுக்கு வரிவிலக்கு, குறைப்பு என்ற இந்த முரணை, முதலில் நேர்செய்ய வேண்டும்.

### சம்பளதாரர்கள் என்ன சொல்கிறார்கள்?!

``இந்தியாவில் வருமான வரி என்பது நேரடி வரியாகவும், ஜி.எஸ்.டி என்பது மறைமுக வரியாகவும் இருந்துவருகிறது. சம்பளதாரர்களை (Salaried Class) இது போன்ற வரிகள் அதிகம் பாதிக்கின்றன. வருமானத்தில் 30% வரை நேரடி வரிகள் செலுத்தவேண்டியிருக்கிறது. மீதமுள்ள பணத்தைச் செலவழிக்கும்போது அதற்கும் 28% வரை ஜி.எஸ்.டி விதிப்பதில் நியாயம் இல்லை" என்று கதறுகிறார்கள் பலரும். பொருள்களுக்கான வரிகள் மக்களால் செலவிட முடியாத அளவுக்கு அதிகரிக்கும் சூழலில், அந்தப் பொருள்களுக்கான கள்ளச்சந்தை சூழலும் அதிகரிக்கும். மேலும், மக்களிடம் வாங்கும் திறன் குறைந்தால், பொருள்களுக்கான தேவை குறைந்து தொழில்துறையே பாதிக்கப்படும். இந்த அடிப்படை புரிந்துணர்வுகூட இல்லாமல்தான் இருக்கின்றன அரசின் பொருளாதார நடவடிக்கைகள்.

அமைச்சர்கள் குழுவின் இந்தப் பரிந்துரைகள் குறித்து ஜி.எஸ்.டி கவுன்சில் என்ன முடிவெடுக்கும் என்பது டிசம்பர் 21ம் தேதி தெரியவரும்.

ஜி.எஸ்.டி புயல் ஓயாதது!


Owned and Published by **K.M. ABDULLAH** from 20/491, North Street, Kilakkarai - 623 517
Editor: **ABDULLA SYED ABDEEN**. All legal proceedings arising out of this issue will come under **RAMANATHAPURAM** court jurisdiction only.

بسم الله الرحمن الرحيم

Al-Aqsa
Quran Study Center

அல் முதர்ஜிம் பதிப்பகம்
AL MUTHARJIM
Publications

# அல்குர்ஆன் & ஹதீஸ்

## மாபெரும் தர்பியா நிகழ்ச்சி

## அல் அக்ஸா குர்ஆன் பயிற்சி மையம்

மூன்றாம் ஆண்டு விழா

## அல் முதர்ஜிம் பதிப்பகம்

ஹதீஸ் புத்தக வெளியீட்டு விழா

இன்ஷா அல்லாஹ்
JAN 2025
**14&15**

### சிறப்புரை

அஷ்ஷேஹ்
**கமாலுதீன் மதனி**

அஷ்ஷேஹ்
**அப்துல் மஜீத் மஹ்ளரி**

அஷ்ஷேஹ்
**அப்பாஸ் அலி Zadi, M.A**

அஷ்ஷேஹ்
**அனீசுர்ரஹ்மான் மதனி**

அஷ்ஷேஹ்
**அலி அக்பர் உமரி**

மற்றும்
சில அறிஞர்கள்

இடம்:
தெற்கு தெரு ஜமாத் விளையாட்டு மைதானம் **MYFA** சங்கம் அருகில்
புதுத்தெரு,கீழக்கரை


OUR PRESTIGIOUS SPONSORS

isouq An Islamic Lifestyle
JOINTECH GROUP OF COMPANIES Your Brand, Your Business, Our Staff Musaffah, Abu Dhabi - UAE
SINCE 1985 மொலினா MOLINA Marketing & Trading Co. L.L.C. Dubai Abudhabi Sharjah
VPRO PREMIUM UPVC WINDOWS
meera scans precise.
Spicy
LIMRA Traders Wholesale Dealers in Cosmetics, Fancy goods etc Colombo, Srilanka
KAREEM CONSTRUCTION
KEEGGI
KEELAI NEWS


**முஸ்லிம் வாலிபர் முன்னேற்ற சங்கம்.**
மற்றும்
**கீழை அமைதி மற்றும் வழிகாட்டி மையம்.**

MYFA

CONTACT : +91 9566505693, +91 7695900207

Registered with Registrar of Newspaper of India No.TNTAM/2005/17836




Regd No. TNTAM/2005/17836